Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :168 வைகாசி 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை 15 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா பலி 300,000!

வுகான், மே 15

கொரோனா வைரஸால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டியது. சீனாவின் வுகான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் தற்

02

## ஞாயிறு முழுவதும் ஊரடங்கு அமுல்!

கொழும்பு, மே 15

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் நாடெங்கிலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: கொழும்பு, ஹம்பகா

02

யாழில் பேரதிர்ச்சி!



# குணமடைந்த 5 பேருக்கு மீண்டும் கொரோனா!

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டு சிகிச்சை முடிந்து வீட்டுக்கு அனுப்பப்பட்ட ஐந்து பேருக்கு மீண்டும் கொரோனாத் தொற்றின் தாக்கம் சிறிதளவு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் மீண்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் யாழ்ப்பாணம் மீண்டும் கொரோனா அபாயத்தில் சிக்கும் நிலை தோன்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

02

## கொரோனா 925

கொழும்பு, மே 15

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 36 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 925ஆக அதிகரித்துள்ளது எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 63 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள

02

## மூன்று மாத சம்பளம் கோத்தா அன்பளிப்பு!

கொழும்பு, மே 15

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது மூன்று மாத சம்பளத் தொகையான 2 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாவை

02



## யாழ். பல்கலையில் நேற்று அஞ்சலிப்பு!

யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நினைவுகூர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்

02

## பிதிர்க்கடனை நிறைவேற்ற இருவர் மட்டும் வாருங்கள்!

யாழ்ப்பாணம், மே 15

கீரிமலை அந்தியேட்டி மடத்தில் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்கு இருவர் மட்டுமே வரவேண்டும் என்று தர்மகர்த்தா சபையினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கீரிமலை அந்தியேட்டி மடத்தில்

02

## ஆனல்டின் அதிகாரம் இன்றுமுதல் ஈசனுக்கு!

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரிய அதிகாரங்கள் முதல்வர் ஆனல்டிடம் இருந்து பிரதி முதல்வர் து.ஈசனுக்குக் கைமாறுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக இம்மனுவல் ஆனல்ட் செயற்பட்டு வருகின்றார். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடவுள்ளார். இதையடுத்தே யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் உத்தியோகபூர்வ அறிவுறுத்தலுக்கு அமைய அவர் தனது அதிகாரங்களை பிரதி முதல்வர் ஈசனிடம் எழுத்து மூலமாக கையளிக்கவுள்ளார். இன்று அவர் தனது பொறுப்புக்களையும் அதி

02

கொரோனாவைக் காரணம் காட்டி

## தனியார் ஊழியரை பணிநீக்க முடியாது

அரசு அறிவிப்பு

கொழும்பு, மே 15

முதலாளிமார் சம்மேளனத்துடன் முன்னெடுத்த பேச்சு ஊடாக கொரோனா தாக்கத்தை கருத்தில் கொண்டு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்கள் எவரதும் பணியையும் பறிக்க முடியாது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நிறுவனங்கள் மீண்டும் தலைதூக்கும் வரையில் கொடுப்பனவில் 50 வீதத்தையேனும்,

02

முள்ளிவாய்க்கால்

## நினைவேந்தல் நிகழ்வில் இம்முறையும் குழப்பமா?

யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல் மே 18ஆம் திகதி நினைவுகூரப்படவுள்ள நிலையில், சமகால சூழலில் பெருமளவு மக்களை முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூட்ட முடியா

02



DFCC வங்கி தரும் அதிக வட்டி

DFCC நிலையான வைப்பு

நிலையான வைப்புகளின் மூலம் வருமானத்தைப் பெறும் 55 வயதிற்கு மேற்பட்ட மதிப்பிற்குரிய உங்களுக்காக, ஒரு வருட நிலையான வைப்புக்கு DFCC வங்கி தரும் அதிக வட்டி.

10% வட்டி முதிர்வின்போது வழங்கப்படும். 9.75% (AER10.2%) வட்டி மாதாந்தம் வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி நீங்கள் இருக்கும் இடத்திற்கே நாம் வருகின்றோம்.

இந்த அரிய வாய்ப்பு மே 31 ஆம் திகதி வரை மட்டுமே. இன்றே அழையுங்கள் 0112 350000

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

# மங்கள சி.ஐ.டியில் நேற்று 5 மணிநேர வாக்குமூலம்

கொழும்பு,மே 15

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று சுமார் 5 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார்.

இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் வன்னி மாவட்ட வாக்காளர்களுக்கு, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, வன்னியில் வாக்களிப்பதற்காக இ.போ.ச பஸ்களின் மூலம் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தமை தொடர்பான சம்பவத்தின் அடிப்படையிலான விசாரணைகளுக்கு அமைய, அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று வரவழைக்கப்பட்டார்.

பிற்பகல் 2 மணியளவில் அங்கு முன்னிலையாகியிருந்த மங்கள சமரவீர இரவு 7 மணிவரை வாக்குமூலம் அளித்தார். (ம-22)

## பிதிர்க்கடனை...

பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்கு இருவருக்கு அதிகமானவர்கள் செல்வதற்கு படையினர் தடைபோட்டுள்ளதை அடுத்தே நாட்டின் நிலமைகளைக் கருத்தில்கொண்டு இருவர் மாத்திரம் வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## யாழ்...

தின் மாணவர்கள் உட்செல்லும் வாயிலில் பொலிசார் ஒரு மணி நேரமாக காத்திருக்க, பல்கலைகழக பிரதான வாயிலில் மாணவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பிரதான வாயிலில் நேற்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் மாலை 6 மணிமுதல் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உட்செல்லும் வாயில் முன்பாக கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பொலிசார் காத்திருந்தனர்.

பொலிசார் அங்கு காத்திருக்க மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் திட்டமிட்டபடி இரவு 7 மணிக்கு பிரதான வாயில் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். மாணவர்கள் அஞ்சலி செலுத்தி முடியும் தருவாயில், பிரதான வாயிலில் நிகழ்வுகள் நடைபெறுவதனை அறிந்து கொண்ட பொலிசார் அவ்விடத்திற்கு விரைந்து நிகழ்வினை தடுக்க முயன்றனர்.

அப்போது மாணவ ஒன்றிய பிரதிநிதிகள் மூவர்தாம் நிகழ்வு முடிந்து திரும்புகிறோம் எனக் கூறிச் செல்ல முற்பட்டவேளை அவர்களை புகைப்படம் எடுத்த பொலிசார் அவர்களின் அடையாள அட்டைகளை வாங்கி விபரங்களை குறிப்பெடுத்து கொண்டனர்.

அத்துடன் 'இவ்வாறான நினைவஞ்சலி நிகழ்வுகளை நடாத்துவது சட்டவிரோதமானது, மாணவர்களாக இருப்பதனால் உங்களை கைது செய்யவில்லை. இல்லை எனில் உங்களை கைது செய்து மூன்று மாத காலம் வரையில் தடுத்து வைக்க கூடிய அதிகாரம் எமக்குண்டு' என கடுமையாக மாணவர்களை பொலிசார் மிரட்டி அனுப்பினர். (ம-36,20)

## நினைவேந்தல்...

துள்ளது. எனவே அன்றைய நாளில் மக்கள் தமது வீடுகளில் மாலை 7 மணிக்கு தீபங்களை ஏற்றி உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எதிர்வரும் 18ஆம் திகதி 6.18 சுடரேற்றுமாறு நேற்று கோரிக்கை விடுத்திருந்த நிலையில் மாணவர் ஒன்றியம் இந்த அறிவிப்பை நேற்று விடுத்துள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யார் முன்னின்று நடத்துவது என்பது தொடர்பில் முரண்பாடுகள் ஒவ்வொரு தடவையும் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## கொரோனா பலி...

போது உலகம் முழுதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. 200 நாடுகள் இந்த வைரஸின் பிடியில் சிக்கியுள்ளன. தினமும் சராசரி 5 ஆயிரத்துக்கும் குறையாத உயிரிழப்புக்கள் பதிவாகிக் கொண்டுதான் உள்ளன. இந்த நிலையில் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டியது. உச்சக்கட்டமாக அமெரிக்காவில் மட்டும் 85 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். (ம)

## ஞாயிறு...

வைத் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் நாளை சனிக்கிழமை இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு திங்கட்கிழமை காலை 5 மணிக்குத் தளர்த்தப்படும். ஞாயிறு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்.

கொழும்பு, கம்பஹா தவிர இதர அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்கு 23ஆம் திகதி சனிக்கிழமை வரை தினசரி இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு காலை 5 மணிக்குத் தளரும். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இயல்பு நிலையை ஏற்படுத்த முன்னர் விடுத்த அறிவிப்பு அப்படியே இருக்கும் என்றுள்ளது. (ம-22)

## கொரோனா...

னர். அதையடுத்துத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 382இலிருந்து 445ஆக உயர்ந்துள்ளது. (ம-22)

## மூன்று...

கொரோனா சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

அதற்கான காசோலை ஜனாதிபதியால் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவிடம் கையளிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-22)

## தனியார்...

குறைந்த பட்சம் 14 ஆயிரத்து 500 ரூபாவுக்கு குறித்த தொகையை மாதாந்தக் கொடுப்பனவாக தனியார் துறையினருக்கு வழங்க வேண்டும் என்றும் அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட போதே அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு இப்போதுள்ள நிலையில் நாட்டுக்கான இறக்குமதியை குறைத்தாக வேண்டும். இது குறித்து ஆரம்பத்தில் அரசு தீர்மானம் எடுத்துள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் மருத்துவ இறக்குமதியின் தடைகள் இல்லை. அத்துடன் கட்டுமானப்பணிகளுக்கான பொருள்கள் உள்ளிட்ட சில பொருள்களுக்கு இறக்குமதி அனுமதி உள்ளது. தேசிய இறக்குமதியாளர்கள், தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு பிரச்சினைகள் இருப்பின் நிதி அமைச்சை தொடர்புகொண்டு தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடியும்.

அதேபோல் நாட்டில் அரச துறையினரைப் போல் மூன்று மடங்கு அதிகமானவர்கள் தனியார் துறையினரேயாகும். அவர்களே நாட்டின் பொருளாதாரத்தில் அதிக பங்களிப்பை செலுத்துகின்றனர். இந்த நாட்டில் அதிக சிரமங்களை எதிர்கொள்ளும் நபர்கள் அவர்களேயாவர். அரசுக்கு சுமையைக் கொடுக்காது அரசைக் கொண்டு நடத்த பெரிய அளவில் கைகொடுக்கும் நபர்களாவர்.

ஆனால் இன்று அவர்கள் உள்ளிட்ட சகல துறையினரும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக நிறுவனங்கள் மூடப்பட்ட நிலையில் தனியார் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவது எவ்வாறு என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலைமை மேற்கத்திய நாடுகளில் உருவானால் அவர்கள் உடனடியாக நிறுவனத்தை மூடிவிட்டு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். எனினும் இங்கு அவ்வாறு இடம்பெற முடியாது. மிக அதிகமான ஊழியர்கள் தனியார் துறையில் உள்ளனர். அவர்களை பாதுகாக்க வேண்டும். அதற்காகவே அரசு ஊரடங்கு காலத்திலும் படிப்படியாக நிறுவனங்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கியுள்ளது. ஒருசில விடயங்களில் அவர்களுக்கான தற்காலிக நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடன் செயற்பாடுகள் தற்காலிகமாக மூன்றுமாத காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

அமைச்சரவையில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உரிய காரணிகளை தெளிவுபடுத்தினார். முதலாளிமார் சம்மேளனத்துடன், தொழிற்சங்கங்கள், நிறுவனங்கள் அனைத்துடனும் அமைச்சர் பேச்சுக்கள் பலவற்றை முன்னெடுத்துள்ளார். அது குறித்தும் தெளிவுபடுத்தினார். இதன்போது கொரோனா தாக்கத்தை கருத்தில் கொண்டு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்கள் எவரதும் வேலைகள் பறிக்கப்பட முடியாது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அது குறித்து தனியார் நிறுவன சங்கங்களுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் பிரதான இரண்டு காரணிகளாக நிறுவனங்கள் மீண்டும் தலைதூக்கும் வரையில் கொடுப்பனவில் 50 வீதத்தையேனும், குறைந்த பட்சம் 14ஆயிரத்து 500 ரூபாவுக்கு குறித்த தொகையை மாதாந்த கொடுப்பனவாக தனியார் துறையினருக்கு வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஆனல்டின்...

காரங்களையும் இன்று ஈசனிடம் கையளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-ந)

## குணமடைந்த...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று 27 பேருக்குச் சோதனை நடத்தப்பட்டது. அரியாலை பகுதியில் கொரோனாவுடன் அவதானிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்பட்ட சிலரும் நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் ஐந்து பேருக்கு இலேசான தொற்று உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் அனைவரும் அடுத்த இரண்டு வாரங்கள் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிலருக்கு மீண்டும் சோதனை நடத்தப்பட வேண்டியுள்ளது என்றும் யாழ்.போதனா மருத்துவனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 17 பேர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டிருந்தனர். அவர்களில் 16 பேர் நலம்பெற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். அவர்களிடத்தில் நடத்தப்பட்ட சோதனையிலேயே இந்தப் பேரதிர்ச்சி தரும் விடயம் தெரியவந்துள்ளது.

முன்னதாக, சுகாதர சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாஷிங்க கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வீடு திரும்புகின்றவர்களை மீண்டும் பரிசோதிக்கத் தேவையில்லை. அது நேரத்தை வீணடிக்கும் செயல் என்று தெரிவித்திருந்தார். அதேநேரம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க வடக்கு மாகாண இணைப்பாளர் காண்டிபன் அண்மையில் உதயனுக்கு வழங்கிய நேர்காணலில் 'சிகிச்சை முடித்து வீடு திரும்பும் வடக்கு மாகாண மக்கள் மீண்டும் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்' என்று தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையில் மேற்கொண்ட பரிசோதனையிலேயே நலம்பெற்றவர்கள் என்று அனுப்பப்பட்டவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை 445 மக்கள் கொரோனாவுக்குச் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். அவர்களில் ஒருவருக்கே மீண்டும் கொரோனாத் தாக்கம் ஏற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஒரேநாளில் பூரண குணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட ஐந்துபேர் மீண்டும் கொரோனாத் தொற்றின் இலேசான பாதிப்புடன் இருப்பது கண்டறியப்பட்ட விவகாரம் பெரும் அச்சத்தை மக்களிடையே உண்டுபண்ணியுள்ளது. அதேவேளை கொரோனாவில் இருந்து பூரண சுகம் பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்ட 445 பேருக்கும் மீண்டும் பிசி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு குணமடைந்ததாகக் கூறப்படுவோரில், சிலருக்கேனும் கொரோனாத் தாக்கம் நீடிக்குமாயின் அவர்கள் நோய்க் காவிகளாக மாறி, கொரோனாவை சமூகப் பரவலடைய வைக்கும் நிலை ஏற்படலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. (ம)

# கோத்தாபயவை தோற்கடிப்போம்

## ராஜிதவின் மகன் சூளுரை

**கொழும்பு, மே 15**

**2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி மஹிந்த அரசை தோற்கடித்தது போல அடுத்த சில மாதங்களில் கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசையும் வீழ்த்துவோம். அதற்கான நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது. இவ்வாறு ராஜித சேனாரத்னவின் மகனான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன சூளுரைத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக்கட்சி இரண்டுபட்டுவிட்டது, சஜித் அணியும், ரணில் தரப்பும் பிரிந்துவிட்டது என்று சந்தோசமடைந்த ராஜபக் ஷ தரப்புக்கு, தற்போது பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து குரல் கொடுத்து வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனுவை ஆட்சேபித்து வழக்கு தாக்கல் செய்தவர்கூட ராஜிதவுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னிலையாகியுள்ளார். எனவே, ராஜிதவை வைத்து முன்னெடுக்கவிருந்த அரசியல் ஆட்டத்தில் கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசு தோல்வி கண்டுள்ளது.

ராஜித சிறைவைக்கப்பட்டாலும், பிரிந்த ஜனநாயக அணிகள் நீதிக்காக ஒன்றிணைந்துள்ளன. சந்திரிகா, மஹிந்த ஆகியோரும் ராஜிதவை சிறையில் அடைப்பதற்கு முயற்சித்தனர். அது கைகூடவில்லை. சந்திரிக்கா, மஹிந்தவால் ஒன்றும் செய்யமுடியாமல் போனதை கோத்தாவுக்குச் செய்வதற்கு இடமளிக்கமாட்டோம். ஜனநாயகத்துக்கான எமது போராட்டம் தொடரும். அதற்கான அடித்தளம் ராஜிதவின் கைதுக்கு எதிரான நடவடிக்கையில் இருந்து ஆரம்பமாகிவிட்டது. இந்த ஆட்சியை தோற்கடிக்கும்வரை அது தொடரும். எம்மை கொலை செய்யலாம். ஆனால், தோற்கடிக்கமுடியாது. எந்தவொரு சவாலையும் ஏற்போம் - என்றார். (ஒ,5,44)

முன்னரே தெரிந்திருந்தால்

# ஸஹ்ரானின் கழுத்தை அறுத்தெறிந்திருப்பேன்

## மேர்வின் சூளுரை

கொழும்பு, மே 15

ஸஹ்ரான் குறித்து எனக்கு முன்கூட்டியே தகவல் தெரிந்திருந்தால் தேடிச்சென்று அவரின் கழுத்தை வெட்டியிருப்பேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தனிநபர் இழைத்த குற்றத்துக்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் விமர்சிப்பது தவறும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். மாறாக நிரபராதிகள் குற்றவாளிகளாக்கப்படக்கூடாது. அந்தச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பாவி முஸ்லிம் மக்களின் கடைகள் உடைக்கப்பட்டன. சொத்துகள் சேதமாக்கப்பட்டன. அதே போல் தமிழர் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டால் தமிழ் மக்கள் தாக்கப்படுகின்றனர். இது அதர்மமாகும். இது பௌத்த தர்மத்துக்கு எதிரான செயலாகும்.

இலங்கை சிங்கள, பௌத்த நாடாக இருக்கின்றபோதிலும் ஏனைய இனம், மதத்தின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், எம்மை மிதித்துவிட்டுப் பயணிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கமாட்டோம். அதேவேளை, வருகின்ற பொதுத்தேர்தலில் துட்டகைமுனு மன்னன் ஆட்சிசெய்த கோட்டையிலேயே அதாவது அநுராதபுரம் மாவட்டத்திலேயே போட்டியிடுகின்றேன். அந்த புனித பூமியை பாதுகாப்பேன். மாட்டிறைச்சி விற்பனையைத் தடுப்பேன் - என்றார். (ஒ,5,44)

# இரண்டும் கெட்டான் நிலைமை!

யாழ்ப்பாணம், மே 15

பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த அரச அலுவலர்கள் சிலர் தேர்தல் இடம்பெறாமையால், இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.


நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்றது. மார்ச் 19ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் நிறைவுபெற்றதும் ஏப்ரல் 25ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் அன்றைய தினமும் தேர்தல் நடைபெறுவது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் சிலர் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது பணிநிலைகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருந்தனர். இதனால் மாதாந்த வேதனத்தை அவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தலும் இல்லை, மாதாந்த வேதனமும் இல்லை என்ற இரண்டும் கெட்டான் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். (ஒ,5,9)

# ரணில் அணி சிறைக்கு!

## அரசு திட்டவட்டம்

கொழும்பு, மே 15



நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நல்லாட்சி அரசின் அமைச்சர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குற்றவாளிகள் அனைவருக்கும் தக்க தண்டனையை நீதித்துறை வழங்கும். இவ்வாறு ராஜபக் ஷ அரசின் பேச்சாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசு என்ற பெயரில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி செய்து நிதியைச் சூறையாடிய அனைத்து முன்னாள் அமைச்சர்களும் விரைவில் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி உட்பட நல்லாட்சி அரசில் இடம்பெற்ற சகல மோசடிகளுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் சிறைக்குச் செல்வார்கள். எக்காரணம் கொண்டும் குற்றவாளிகள் தப்பிப்பிழைக்க மாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நாம் நிறைவேற்றியே தீருவோம். இதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவும் உறுதியாக இருக்கின்றார்கள் - என்றார். (ஒ,5,22)

# 3,000 சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ததா அரசு?

## மறுக்கிறார் அமைச்சரவை இணைப்பேச்சாளர்

கொழும்பு, மே 15

கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியிலும் அரசு 3 ஆயிரம் வாகனங்களை இறக்குமதி செய்துள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண நிராகரித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது இது குறித்துக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாள்களில் சுமார் 3 ஆயிரம் வாகனங்களை அரசு கொள்வனவு செய்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதனை நாம் நிராகரிக்கின்றோம். ஒரு வாகனத்தையேனும் அரசு கொள்வனவு செய்யவில்லை என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்கு மூன்றாண்டுகள்வரை வாகனங்களை கொள்வனவு செய்வதில்லை என்று ஜனாதிபதி தனது கொள்கை விளக்கத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் 5 ஆண்டுகள்வரை அமைச்சர்களுக்கோ, அரச அதிகாரிகளுக்கு புதிதாக வாகனங்கள்



கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கமாட்டார் என்றே நம்புகின்றோம் என்றார்.

அதேவேளை, கொரோனா விவகாரத்தில் எவ்வித வெளிநாட்டு உதவிகளும் இன்னும் இலங்கைக்கு கிடைக்கவில்லை. அரச நிதியங்களில் இருந்தே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வாழ்வாதாரக் கொடுப்பனவாக சுமார் 60 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன், சொகுசு வாகன இறக்குமதிக்கு அரசு தடைவிதித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதிக்கு தடையில்லை என்று இதன்போது மற்றுமொரு அமைச்சரவை இணைப்பேச்சாளரான பந்துல குணவர்தன குறிப்பிட்டார். (ஒ,5,44)

# விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி,மே 15

சாவகச்சேரி நகரை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் முதிய வர் உட்பட மூவர் காயமடைந்தனர். இந்த விபத்துக்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (து-9)

# நினைவேந்தலை வீட்டிலேயே கடைப்பிடியுங்கள்

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை



**வவுனியா,மே 15**

**தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையால் மே18 நினைவேந்தலை தத்த மது வீடுகள், ஆலயங்கள், பொது இடங்களில் பாதுகாப்புடன் கடைப்பிடிக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் பி.உயந்தன் தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இறுதிக்கட்ட போரில் படுகொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் நடந்தேறின. இவை நம்பத்தகுந்த ஆதாரங்கள் மூலம் ஐ.நா.சபை உறுதியும்செய்தது. தமிழினத்தின்மீது நடந்தேறும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைஐ.நாவும் சர்வதேச சமூகமும் வெறுமனே அவதானித்துக் கொண்டிருப்பது கவலைக்குரியதாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைக்கான நீதி வேண்டி தமிழர்கள் ஒரு தசாப்த காலமாக ஐ.நாவின், சர்வதேச சமூகத்தின் உதவியை நாடியுள்ளார்கள். நடந்தேறிய அநீதிகளையும், உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கான சர்வதேச நீதி விசாரணை இன்னும் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை, சர்வதேசமும் கண்துடைப்பு நாடகத்தையே தமிழர்களின் உணர்வான போராட்ட வழிமுறைகளிலும் காட்டி வருகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். விசாரணைகளைத்துரிதப்படுத்தவும் தமிழ் மக்களிற்கான நீதியை பெற்றுத்தரவும் சர்வதேச சமூகம் முன் வரவேணடும்.

2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடங்கி மே 2009 வரை சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்களை பேரினவாதம் படுகொலை செய்து, இன அழிப்பினை செய்துள்ளது. இது எவ்வளவு மோசமான வலி அதே சமயம் இதற்கான நீதியை பெற யாரும் தமிழர்களுக்கு சார்பாக முன்வரவில்லை என்பதும் இன்னமும் துயரத்தை அளிக்கிறது. உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து, உடல் பாகங்களையும் இழந்து நடைபிணம் போல் உயிரை மட்டும் பிடித்துக்கொண்டு பிற நாடுகளில் நாடோடி களாகவும் சொந்த நாட்டில் அகதிகளாகவும் வாழும் தமிழர்களுக்கு இந்த உலகத்தின் மனிதாபிமானம் தான் என்ன? பாதிக்கப்பட்டவன் தமிழன் தானே என அலட்சியப்போக்கு தொடர்ந்தவாறு உள்ளது. எனவே அன்பிற்குரிய தமிழ் மக்களே இந்நாளில் உலக சரித்திரத்தில் கறைபடிந்த தமிழின கருவறுப்பை நாம் அனைவரும் நினைவுகூறு வதோடு நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமையால் (கொவிட்19) மே18 நினைவேந்தலை அன்றையதினம் தத்தமது வீடுகளிலும் ஆலயங்கள் பொது இடங்களிலும் பாதுகாப்புடன் கடைப்பிடியுங்கள். எங்கள் உணர்வுகளை வெல்லும் வரையும் உணர்வெழுச்சியாக எமது உறவுகளின்நினைவலைகளை கடைப்பிடிப்போம் - என்றார்.

(ப-110)

# முள்ளிவாய்க்கால் படுகொலையை கஞ்சி குடித்து நினைவேந்துவோம்!

## துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 15

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று பிரச்சினைகாரணமாக மக்கள் கூட்டமாக நடமாட முடியாத நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுநாள் அன்று காலை மக்கள் அனைவரும் காலை உணவாக கஞ்சிகாய்ச்சி ளங்கள் அவலவாழ்வைநினைவிற்கொள்ள வேண்டும் என்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ச.சுயன்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது;

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அவசர நிலையில் மக்கள் இன உணர்வினை வெளிப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூருவதன் ஊடாக எமது உணர்வுகளை எதிர்காலச் சந்ததிக்கு கடத்தக்கூடிய வகையில் முள்ளிவாய்க்கால் நிகழ்வை அரசியலுக்காகப் பயன்படுத்தாது ஒவ்வொரு தமிழனினதும் உணர்வுரீதியான விடியலை நோக்கிய நினைவேந்தலாக அமைவேண்டும். இதற்கும் அரசியலுக்கும் எவ்வித தொடர்புகளும் எக்காலத்திலும் இருக்கக்கூடாது என்று வேண்டுகின்றேன்.

எமது மக்கள் பெரும் உணவுத் தட்டுப்பாட்டின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் சேகரித்து வைத்திருக்கின்ற நெல்லினை பிரதேசங்கள் ஊடாக பகிர்ந்தளிப்பதால் வறுமையைப் போக்கமுடியும். தேர்தலுக்காக அதிகளவான பணத்தை அரசாங்கம் செலவுசெய்யத்தீர்மானித்துள்ளமையானது மேலும் மக்களையும் நாட்டினையும் கடனாளியாக்கும் செயலாக அமையும் . 225 கதிரைகளை அலங்கரிப்பதற்கான செய்பாட்டில்தான் அரசு அக்கறை கொண்டிருக்கின்றது. முதலில் மக்களின் வறுமையைப் போக்கி கொரோனாவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்த பின்னே அரசியலைப் பார்க்க வேண்டும் -என்றார்.

(ப-19)




# 1,330 கிராம் ஹெரோய்னுடன் சிப்பாய் நேற்றுக் கைதானார்!

வவுனியா, மே 15

முச்சக்கர வண்டியில் கொண்டு செல்லப்பட்ட 1,330 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் சிப்பாய் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக வன்னி பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவு பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா நகரில் இருந்து கெப்பறிப்பொலவா பிரதேசத்துக்கு விற்பனைக்காக முச்சக்கர வண்டி ஒன்றில் 1,330 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், இலங்கை விமானப் படை யின் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் வன்னிப் பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவு பொலிசார் குறித்த முச்சக்கர வண்டியை மடுகந்த பகுதியில் வைத்து மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது குறித்த முச்சக்கர வண்டியில்1,330கிராம்ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், அட்டமஸ்கட பகுதியை சேர்ந்த 36 வயதுடைய சிவில் பாதுகாப்பு படைச் சிப்பாய் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன. நாளையதினம் (இன்று) அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் - என்றனர். (ம-110)

# தமிழின படுகொலையின் நினைவேந்தலை எமது இல்லங்களில் இருந்து ஆரம்பிப்போம்

## சிவில் சமூக அமையம் அழைப்பு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவினால் ஏலவே கோரப்பட்டுள்ளவாறு தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை எமது இல்லங்களில் இருந்து ஆரம்பிப்போம் என்று தமிழ் சிவில் சமூக அமையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தமிழினப் படுகொலையின் 11ஆவது நினைவு நாளை தமிழ் தேசம் எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி கடைப்பிடிக்கவுள்ளது. ஆழமாகிவரும் இராணுவமயமாக்கல், அச்சுறுத்தும் கொரோனோவுக்கு மத்தியில் நாம் இம்முறை இந்த நினைவு நாளை அணுக வேண்டியுள்ளது. பொறுப்புக்கூறல் போராட்டம் இந்த தலைமுறையோடு முடிவடையாது என்பதும் தலைமுறை கடந்ததாக அமையும் என்பதும் எமக்கு கடந்த வருடம் உணர்த்திய பாடங்கள். நீண்ட, தலைமுறை கடந்த நீதிக்கான போராட்டத்திற்கான நிறுவனம் சார் ஏற்பாடுகளையும் கட்டமைப்பு சார் செயற்பாடுகளையும் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த போராட்டத்திற்கு தேவையான கூட்டு உள வலிமையையும் ஓர்மத்தையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின் பிறந்த ஓர் தலைமுறை எமது தாயகத்தில் வளர்ந்து வருகின்றது. அந்த தலைமுறைக்கு எமது தேசத்தின் வரலாற்றையும் போராட்டத்தின் வரலாற்றையும் நாம் அனுபவித்த, அனுபவிக்கும் ஒடுக்குமுறையையும் பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும். அந்த ஒடுக்குமுறையோடு வாழப் பழகாதிருக்க, அவ்வொடுக்குமுறையிலிருந்து அவர்களைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிவகைகளை நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவ்வாறான தற்காப்பு பொறிமுறைகளில் ஒன்று நினைவேந்தல்களை முறையாக ஒழுங்கமைத்துக் கொள்வது.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவினால் ஏலவே கோரப்பட்டுள்ளவாறு இந்த முறை நாம் நினைவேந்தலை எமது இல்லங்களில் இருந்து ஆரம்பிப்போம். மே 18 அன்று இரவு 7 மணிக்கு வீடுகளில் தீபங்கள் ஏற்றி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூரல். எமது மக்கள் போரின் இறுதி நாள்களில் உட்கொண்ட கஞ்சியை அன்றைய தினம் ஒரு வேளையேனும் உணவாகாராமாக்கிக் கொள்ளல். இரவு 7 மணிக்கு அனைத்து வணக்கத்தலங்களிலும் விசேட மணி ஒலி எழுப்பி பேரவலத்தை நினைவேந்தல்.

இத்தகைய செயற்பாடுகள் நினைவேந்தலை சமூகமயப்படுத்த உதவும் என நாம் நம்புகிறோம். எமக்குள் என்றும் நீங்கா அந்த நினைவு விளக்கை தூண்டி விட அனைவரும் கரம் கோர்ப்போம் என்றுள்ளது.

(ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தொப்பி வியாபாரியும் மூன்று மாதச் சம்பளமும்

சின்ன வயதிலே பாட்டி வடைசுட்ட கதைக்கு அடுத்த இடம் தொப்பி வியாபாரியின் கதைதான். எல்லோருக்கும் அந்தக் கதை தெரிந்ததுதான் என்றாலும் ஒரு மீள் நினைவூட்டல்.

ஒரு தொப்பி வியாபாரி, தன்னுடைய வியாபாரத்துக்காக புதிய தொப்பிகள் அடங்கிய மூடையைச் சுமந்தவாறு காட்டு வழியூடாக நகரத்தை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தான். நீண்டதூரம் நடந்ததால் களைப்படைந்த வியாபாரி, காட்டிலுள்ள ஒரு பெரிய மரத்தின் கீழ் தொப்பி மூடையை வைத்துவிட்டு, சற்று நேரம் கண்ணயர்ந்தான். அவன் உறக்கம் கலைந்து எழுந்த போது, மூடையில் இருந்த தொப்பிகள் ஒன்றையும் காணவில்லை. அதனால் திகைத்துப் போன வியாபாரி, தொப்பிகளைத் தேடியபோது அவனது பார்வை மரத்தின் மீது சென்றது. அங்கே ஏராளமான குரங்குகள் அவனது தொப்பிகளை எல்லாம் எடுத்து தம் தலையில் அணிந்திருந்தன. அவற்றிடம் இருந்து தன் தொப்பிகளை மீட்க, கைகளை அங்குமிங்குமாக அசைத்தான். பதிலுக்கு குரங்குகளும் கையசைத்தன. "சூய்ய்ய்" என்று குரங்குகளை பெருங்குரலில் கலைத்தான். அவையும் அதேபோன்று குரலெழுப்ப முயன்றன. பின்னர் அவன் குரங்குகளை நோக்கி கல்லால் எறிந்து பார்த்தான். பதிலுக்கு குரங்குகளும் மரத்தில் இருந்த காய்களைப் பிடுங்கி அவனை நோக்கி எறிந்தன. அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நாம் செய்வதைப் பார்த்து இந்தக் குரங்களும் செய்கின்றனவே. அப்படியானால் இப்படிச் செய்வோம்' என எண்ணிக் கொண்டு தன் தலையில் இருந்த தொப்பியை எடுத்துதரையில் போட்டான். உடனேகுரங்குகளும் தொப்பியைத் தரையில் போட்டன. உடனேயே வியாபாரி தன் தொப்பிகளை எடுத்துக் கொண்டு காட்டை விட்டு நடையைக் கட்டினான்.

இப்போது இந்தத் தொப்பிக் கதைக்கு என்ன அவசியம்? அவசியம் இருக்கின்றது. கொரோனாவால் வற்றிப்போயிருக்கும் கஜானாவை நிரப்ப என்னென்னவோ உபாயங்களையெல்லாம் அரசு தேடிக் கொண்டே இருக்கிறது. அப்படி ஒரு உபாயத்தை ஜனாதிபதியின் செயலர் ஜயசுந்தர கண்டுபிடித்தார். அதுதான். "அரச ஊழியர்களின் ஒரு மாத வேதனைத்தை அரசுக்கு கொவிட் 19 நிதியத்துக்கு வழங்குவது" . அதை எடுத்த எடுப்பிலேயே வாயால் சொல்லாமல் இந்தத் தொப்பி வியாபாரியின் கதையில் வந்ததைப் போல முதலில் தன்னுடைய ஒரு மாதச் சம்பளத்தை கொவிட் நிதியத்துக்கு வழங்கினார். தன்னைப் பார்த்து ஏனைய அரச ஊழியர்களும் அப்படித் தாமாகவே செய்ய முன்வருவார்கள் என்பது அவரின் கணிப்பு. ஆனால் ஒரு ஈ, காக்கா கூட அப்படித் தம்முடைய ஒரு மாதச் சம்பளத்தை அரசுக்குத் தாரைவார்க்க முன்வரவில்லை. வேறுவழியில்லாமல் வெட்கத்தை விட்டு, ஜனாதிபதியின் செயலருக்கான உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பிலே, 'சகல அரச ஊழியர்களும் தம்முடைய ஒருமாத வேதனத்தை அரசுக்கு வழங்க வேண்டும்' என்று வாய்விட்டே கேட்டார்.

ஆனால் இந்தக் கோரிக்கைக்கு பலமான எதிர்ப்பு பல திசைகளிலும் எழுந்தது. அரச ஊழியர்களின் மாத வருமானத்தை நம்பியே அவர்களின் குடும்பங்கள் இருக்கின்றன. கொரோனாவால் ஏற்கனவே சிக்கலுக்குள்ளாகியிருக்கும் அவர்களின் வாழ்வுநிலை , இப்படி மாதச் சம்பளத்தையும் பிடுங்கிவிட்டால் அதோகதியாகிவிடும். எனவே அவ்வாறு மாதச் சம்பளத்தை வழங்கமுடியாது என்று பல தொழிற்சங்கங்கள் பகிரங்கமாகவே அறிவித்ததால், "அது ஜனாதிபதியின் செயலரின் தனிப்பட்ட கருத்து. அரசின் கோரிக்கை அல்ல" என்று பூசிமெழுகப்பட்டது. இப்போது மூன்றாவது முயற்சியாக, அதே தொப்பி வியாபாரியின் உத்தியைப் பயன்படுத்தி, ஜனாதிபதி கோத்தாபய தன்னுடைய மூன்றுமாதச் சம்பளத்தை கொவிட் 19 நிதியத்துக்கு வழங்கியுள்ளாராம். அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே பயணிப்பர் என்று ஜனாதிபதியும் எண்ணித்தான், இந்த மூன்று மாதச் சம்பளம் என்னும் புழுவை மாட்டி, அரச ஊழியர்களுக்குத் தூண்டில் போட்டுள்ளார். அந்தத் தூண்டிலில் சிக்கிவிட அரச ஊழியர்கள் ஒன்றும் தெளிவற்ற சிந்தனை கொண்டவர்கள் அல்லர். எனவே இப்போது தொப்பி வியாபரியின் தந்திரம் பலிக்கப் போவதில்லை என்றே தோன்றுகின்றது.

# எதேச்சதிகார ஆட்சிக்கு தேர்தலில் தக்கபதிலடி!

## மக்களிடம் ஜே.வி.பி. வலியுறுத்தல்

கொழும்பு, மே 15

ராஜபக் ஷக்களின் இனவாதச் செயற்பாடுகளுக்கும், எதேச்சதிகார ஆட்சிக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் பதிலளிக்க வேண்டும் – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களுக்கு நல்லவர்கள் போல் பாசாங்கு காட்டிக் கொண்டு மறுபுறத்தில் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக தமிழ், முஸ்லிம், சிங்கள விரோத இனவாதத்தைக் கிளறிவிடுவது ராஜபக் ஷ கூட்டணியின் விஷமத்தனமான ஆயுதமாக உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிவாகை சூடி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியில் மீண்டும் அமர்ந்து கொள்வதே ராஜபக் ஷ கூட்டணியினரின் இலக்காகும். இதற்காகவே அவர்கள் நாடெங்கிலும் இனவாதச் செயற்பாடுகளை மறைமுகமாக அரங்கேற்றி வருகின்றனர். அதில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் முதலிடத்தில் இருக்கின்றன.

கொரோனா வைரஸ் பேரிடரையும் தமது இனவாதச் செயற்பாடுகளுக்கு ராஜபக் ஷ அரசு பயன்படுத்திக்கொள்கின்றது. மனிதாபிமானமற்ற முறையில் எதேச்சதிகாரத்துடன் இந்த அரசு செயற்படுகின்றது. ராஜபக் ஷக்களின் இந்த இனவாதச் செயற்பாடுகளுக்கும், எதேச்சதிகார ஆட்சிக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் பதிலளிக்க வேண்டும்-என்றார். (ம-ஒ,5,22)

# இனவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை உறுதி!

## பிரதமர் மஹிந்த திட்டவட்டம்

கொழும்பு, மே 15

நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதங்களைத் தூண்டும் வகையில் எவரும் செயற்படக் கூடாது. இனவாதத்தை வளர்த்து விட்டு அதில் குளிர் காய எவரும் முற்படக்கூடாது. இன ஒற்றுமையுடன் வாழ அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். நாட்டில் அரங்கேற்றப்பட்டுவரும் இனவாதச் செயற்பாடுகளுக்கும் அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

மூவின மக்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி ஒற்றுமையுடன் வாழ்வதே அரசின் விருப்பமாகும். இனவாதத்தைத் தூண்டி அதிகாரத்தைத் தக்க வைப்பது அரசின் நோக்கமல்ல. உண்மையான இனவாதிகளை மக்கள் முன்னிலையில் நிறுத்தி அவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் குறிக்கோள் -என்றார். (ம-ஒ,5,22)

# உதயன் செய்தியால் கிடைக்கப்பெற்ற உதவி

யாழ்ப்பாணம், மே 15

கொரோனா நிலைமை காரணமாக தொழிலை இழந்துள்ள ஒலி, ஒளி அமைப்பாளர்கள் அல்லல்படுவதாக உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியைத் தொடர்ந்து ஊர்காவற்துறை தம்பாட்டி வாழ் ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகை செய்தியை அறிந்த புங்குடுதீவு நலன்புரிச் சங்கத்தினரால் தம்பாட்டி ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும் அதனைத் தளமாய் கொண்டு இயங்கும்33குடும்பங்களுக்கும் அண்மையில் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)

# தேர்தல் மனுக்களை விசாரிக்க முழுமையான ஆயம் நியமிப்பு

கொழும்பு, மே 15

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஆட்சேபனை தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலிப்பதற்கு ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.


பொதுத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்துவதற்கு ஆட்சேபனை தெரிவித்து 7 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதைத் தொடர்ந்து இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் பிரதம நீதியரசரால் 5 நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது. தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாமா என்பதை அவர்கள் பரிசீலிப்பார்கள்.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரியா (தலைவர்), விஜித் மலல்கொட, புவனேக அலுவிஹார, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜெயவர்த்தன ஆகியோர் கொண்ட குழாம் நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த வழக்குத் தவணையின் போது முழுமையான ஆயம் நியமிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் தரப்பு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ,5)

# தனியாள் இடைவெளியின்றி அறிக்கை பெற முண்டியடிப்பு

வவுனியா, மே 15

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவலகத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கையெழுத்துவாங்கவந்தவர்கள் தனியாள் இடைவெளிபற்றி அக்கறைப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. சுகாதாரத் திணைக்களத்தில்கூட தனியாள் இடைவெளியைக் கடைப்பிடிக்காவிடில் அத்தகையவர்கள், கிராம மட்டங்களில் எப்படிவிழிப்புணர்வுடன்செயற்படுவர்? என்று கேள்வியெழுப்பப்பட்டது. 'எமக்கு கொரோனா இல்லை' என்று உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ சான்றிதழ் பெறுவதற்கே அவர்கள் அவ்வாறு முண்டியடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



# சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைப்பது ஊரடங்கில் அதிகரிப்பு

*அமர்வில் தவிசாளர் சுட்டிக்காட்டு*

கொடிகாமம், மே 15

கொரோனா, ஊரடங்கு நிலைமையில், சட்டவிரோதமாக கட்டடங்கள் மிக வேகமாக அமைக்கப்பட்டு வருகின்றன என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. ஊரடங்கு வேளையில் கட்டடங்களை அமைக்கவேண்டாம் என்று தடுத்துள்ளோம். அதனையும் மீறி சிலர் கட்டுகின்றனர்.

இவ்வாறு, சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் தலைமையில் சாவகச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் தலைமையுரை ஆற்றுகையில் தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது:

முரண்பாடுஉள்ள இடங்களுக்கு உறுப்பினர்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள், முதலில் உறுப்பினர்கள் தங்களைப் பாதுகாக்க வேண்டும்.

கொரோனா தொற்று உருவாகி இரண்டு மாதங்கள் முடிவடைந்த நிலையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவுள்ள மாவட்டச் செயலர் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினர் சகலருமே கொரோனா காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களைப் புறந்தள்ளியுள்ளனர். இரண்டு மாதங்கள் நிறைவடைந்த நிலையிலும் சந்தைகள் சுகாதார வசதிகள் தொடர்பாகக் கலந்துரையாடவில்லை.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இனிவரும்நாள்களில் ஆரம்பிக்க வேண்டும். கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் செய்யப்பட வேண்டிய வேலைகளை உடனடியாகச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

'சப்ரிகம' வேலைத் திட்டத்தில் 58 வேலைத் திட்டங்கள் கிடைக்கப் பெற்றன. 14 வேலைகள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபை இதுவரை எந்தவிதமான நிவாரண உதவிகளையும் வழங்கவும் இல்லை. வர்த்தகர்களிடமிருந்து உதவிப் பொருள்களைப் பெறவும் இல்லை. உணவுப் பொருள்கள் வழங்குவது தொடர்பாக யாருக்கும் எந்தவிதமான அனுமதியும் வழங்கவுமில்லை. திணைக்களத்திடம் இடர்காலக் கொடுப்பனவு தொடர்பாக அனுமதி கோரப்பட்டுள்ளது. இதுவரை அனுமதி கிடைக்கவில்லை - என்றார். (த-159)

# மணல் ஏற்றியவருக்கு ரூ.50,000 தண்டம்

சாவகச்சேரி, மே 15

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகன சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

கொடிகாமம் பொலிஸார் இருவருக்கும் எதிராக நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்திருந்தனர். சந்தேகநபர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து நேற்றுமுன்தினம் அவர்களுக்கு நீதிமன்று தண்டம் விதித்தது. (த-9)

# நான்கு கட்டங்களாக பாடசாலைகள் ஆரம்பம்

## இடைவேளையும் வெவ்வேறு நேரங்களில் கல்வி அமைச்சு அறிவுறுத்தல்

**கொடிகாமம், மே 15**

**பாடசாலைகளை ஆரம்பிக்க உறுதியான திகதியொன்று தீர்மானிக்கப்படாவிட்டாலும், நான்கு கட்டங்களில் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான பணிகளை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது.**

இதற்கென கல்வி அமைச்சும் சுகாதார அமைச்சும் இணைந்து வழங்கிய வழிகாட்டல்களின் அடிப்படையில் மாகாணமட்ட கலந்துரையாடல்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

**கட்டம் 1 –** மாகாண மட்ட நிறுவனங்களுடன் இணைந்து பெற்றோரின் பங்களிப்புடன் பாடசாலைகளில் தொற்றுநீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இதன் பின்னர் சுகாதார அமைச்சின் வழிகாட்டலின் படி நான்கு நாள்கள் பாடசாலை மூடி வைக்கப்படும்.

**கட்டம் 2 –** கல்விசாரா ஊழியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலைக்கு வருகை தர வேண்டும்.

**கட்டம் 3 –** உயர்தர மாணவர்கள் மற்றும் சாதாரணதர மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தர வேண்டும்.

**கட்டம் 4 –** சிறுவர்கள் பாடசாலைக்கு வர வேண்டும்.

**மேலதிக வழிகாட்டல்கள்:**

முதல் வாரம் பாடசாலை ஆசிரியர்களும் அதிபரும் மாத்திரம் வருகை தந்து பாட அட்டவணையைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒரே வகுப்பில் 52 பேர் காணப்பட முடியாது. தனியாள் இடைவெளி பேணப்பட வேண்டும். சிறுவர்கள் தற்போதைக்கு பாடசாலைக்கு வர மாட்டார்கள் என்பதால் அதற்கு ஏற்றவாறு வகுப்புகளை பயன்படுத்தக்கூடிய வகையில் பாட அட்டவணைகளைத் தீர்மானிக்கலாம்.

ஆசிரியர்கள் அனைவரும் அவரவர் பாட அட்டவணையைத் தயாரிப்பார்கள். அதன் பின்னர் அடுத்த வாரம் உயர்தர மாணவர்கள் பாடசாலைக்கு அழைக்கப்படுவார்கள்.

பாடசாலை இடைவேளை அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் வழங்கப்பட மாட்டாது. கட்டம் கட்டமாகவே இடைவேளை வழங்கப்படும். தேவைப்பட்டால் வாரத்தின் ஏழு நாள்களும் பாடசாலைகளை நடத்த முடியும்.

ஆனால் ஆசிரியர்களோ, மாணவர்களோ ஏழு நாள்களும் வர வேண்டியதில்லை.

வாரத்தின் நான்கு நாள்கள் மாத்திரம் வருகை தரக்கூடிய அடிப்படையில் பாட அட்டவணையை வடிவமைக்க முடியும்.

கைகழுவும் தண்ணீர்க் குழாய்களை பொருத்துதல், கையால் திறக்கக்கூடிய வகையில் அல்லாமல் காலால் அழுத்தி திறக்கக்கூடிய வகையிலான தண்ணீர்க் குழாய்களைப் பொருத்துதல் வேண்டும். இது அரச செலவில் மேற்கொள்ளப்படும். இது 50 மாணவர்களுக்கு ஒன்று என்ற வகையில் அமைக்கத் தீர்மானிக்கப்படும்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவ படுக்கை (அம்புலன்ஸ் படுக்கை) வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உடல் வெப்பநிலை பரிசோதனைக் கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் காணப்படும் பாடசாலைகளில் 50 வீதத்துக்கும் அதிகமான பாடசாலைகளின் மொத்த மாணவர் எண்ணிக்கை 200க்கும் குறைவானவை. இவை பெரும்பாலும் கஷ்டப் பிரதேச பாடசாலைகள்.

இவற்றை முழுமையாக ஆரம்பிக்கக் கூடிய சாத்தியங்கள் காணப்பட்டால் அது குறித்தும் ஆராயப்படும்.

இறுதியாக, மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்த பின்னரே பாடசாலைகள் திறக்கப்படவேண்டும். என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (த-159)

# மோட்டார் சைக்கிளுடன் 20 லீற்றர் கசிப்பு மீட்பு

*சந்தேகநபர் தப்பியோட்டம்*

கொடிகாமம், மே 15

மிருசுவிலில் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட 20 லீற்றர் கசிப்பை மோட்டார் சைக்கிளுடன் மீட்டுள்ளோம் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்பை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குக் கொண்டுசென்றவர் பொலிஸாரைக் கண்டதும் கசிப்பை மோட்டார் சைக்கிளுடன் விட்டு தப்பியோடியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், தமக்குக் கிடைத்த தகவலுக்கமையவே சந்தேகநபரைக் கைதுசெய்யக் காத்திருந்தோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். எனினும், அவர் தப்பியோடிவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

# கொடிகாமம் சந்தையை மீள ஆரம்பிக்குமாறு மனு

## தவிசாளர் ஆணையாளருக்கு அனுப்பினார்

கொரோனாவால் மூடப்பட்டிருந்த கொடிகாமம் பொதுச் சந்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான திட்ட முன்மொழிவு உள்ளூராட்சி ஆணையாளருக்கு சாவகச்சேரி பிரதேச சபையால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் தொடர்ச்சியான கோரிக்கையின் பிரகாரம், அவர்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இது அனுப்பிவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சபை அமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றபோது இதற்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு அது அனுப்பிவைக்கப்பட்டது.

சுகாதாரத்தைச் சரியான முறையில் பின்பற்ற முடியாமை, அதிக வெப்பம், திடீர் மழை போன்றனவற்றால் தற்காலிக சந்தை பாதிக்கப்படுகின்றது. வாகனப் போக்குவரத்துக்கும் இடைஞ்சலாகவுள்ளது. பொதுமக்களின் அதிகளவான முறைப்பாடுகள் போன்ற காரணங்களால் தற்காலிக சந்தைகளில் நடைபெறும் வியாபார நடவடிக்கைகளை மீளவும் சந்தைக் கட்டடத்தில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சந்தைக் கட்டடத்தில் தனியாள் இடைவெளியைப் பேணக்கூடியவாறு இட ஒதுக்கீட்டை வியாபாரிகளுக்கு வழங்கி பொதுமக்கள் உட்செல்லும் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி பாதுகாப்புடன் செயற்பட வைத்தல் மூலம் சந்தையை இயக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் பாவனைக்காக இரண்டு வாயில்களை மட்டும் பயன்படுத்துவதுடன் ஒரு பகுதி வாயிலை உட்செல்வதற்காகவும் மற்றைய வாயிலை வெளிச் செல்வதற்காகவும் மட்டும் பயன்படுத்தமுடியும்- என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# அபிவிருத்தியை முடக்கவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## மன்னார் நகர தவிசாளர் குற்றச்சாட்டு

மன்னார், மே 15

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 550 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் மன்னார் நகரத்தை அழகுபடுத்தும் திட்டத்தைக் குழப்பவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மன்னார் நகரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை அரசியல்வாதிகளான சட்டத்தரணிகள் சிலரே இவ்வாறு செய்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மன்னார் நகரத்தின் அபிவிருத்தியை மையப்படுத்தி பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு இட ஒதுக்கீடு செய்யவேண்டிய காரணத்தால் சபையின் தீர்மானத்துக்கு அமைவாக சட்டவிரோதமாக அங்காடி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த அனைத்துக் கடைகளும் அகற்றப்பட்டு மாற்று இடங்களும் வழங்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தோம்.

மன்னார் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கம் என்கின்ற போர்வையில் ஒரு சிலர் தமது சங்கக் கட்டடம் உடைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த இடம் மன்னார் நகர சபைக்குச் சொந்தமானது. அபிவிருத்தி கருதி நாங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தோம்.

நகர அபிவிருத்திக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு சில காரணத்தாலும் அபிவிருத்தியை முடக்க வேண்டும் என்ற நோக்கத்திலுமே வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்- என்றார். (த-56)

# எங்கள் நாட்டுக்கே அனுப்பிவிடுங்கள்

## கிளிநொச்சியிலுள்ள இந்தியர் கோரிக்கை

கொழும்பு, மே 15

"இந்தியாவின் தமிழகத்திலிருந்து இலங்கைக்குவந்த எங்களை நாட்டுக்கு அழைக்க நடவடிக்கை எடுங்கள்" என்று இந்தியத் தமிழர்கள் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனாவுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த அவர்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்தனர். கொரோனா பரவியதால் விமான நிலையம் மூடப்பட்டது. எவருமே நாட்டைவிட்டு வெளியேறமுடியவில்லை.

இந்தநிலையில் அவர்கள் கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த பெப்ரவரி மாதமளவில் இலங்கைக்கு 8பேர் வந்திருந்தோம். மூவர் கிளிநொச்சியிலும், ஐவர் முல்லைத்தீ விலும் தங்கியுள்ளோம்.

உணவு, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். எங்களை எங்கள் குடும்பத்தினருடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

தமிழகத்தின் மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்த நாம் நாடு திரும்புவதற்கு விருப்பம் இருந்தும், செல்ல முடியாத நிலையில் இங்குள்ளோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் உதவியில் 5ஆயிரம் ரூபா பணம் கிடைத்தது. அதனை வைத்தே செலவுசெய்து வருகின்றோம். தற்போது உணவு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துள்ளோம். எமது பிரச்சினை தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். இதுவரை தீர்வு காணப்படவில்லை. எங்களை விரைவில் இந்தியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்" -என்றனர். (த-6)

# கொரோனாவுக்குப் பின்னரான திட்டங்களைத் தயார்செய்யவும்

## செயலர்கள், பணிப்பாளர்களுக்கு வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

**யாழ்ப்பாணம், மே 15**

**கொவிட்19 வைரஸ் பரவல் நிறைவுக்கு வந்தபின்னர் இரண்டு மாதங்களில் ஏற்படவுள்ள உண்மையான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தயார்நிலையில் இருக்கவேண்டும். முகாமைத்துவ திட்டங்களைத் தயாரிப்பதற்கும் தீர்வு காண்பதற்குமான ஆராய்ச்சிகளை முன்னெடுக்க வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் மீளாய்வுக் கூட்டம் ஆளுநரின் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர்கள், மாகாணத்திணைக்களங்களின் பணிப்பாளர்கள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

பணிப்பாளர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் திணைக்களங்களின்தற்போதையநிலைமைகளை வெளிப்படுத்தியதோடு தமது திணைக்களங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உள்ள சவால்களையும் முன்வைத்தனர்.

அதில் மேற்கண்ட விடயத்தை ஆளுநர் தெரிவித்தார்.

மாகாணத் திணைக்களங்களில் நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகள் தொடர்பில் அந்தந்தத் திணைக் களங்களின் பணிப்பாளர்களே அதற்கான பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாகாணத்தின் அனைத்து திணைக்களங்களிலும் சீரான தன்மையைப் பின்பற்றுமாறு பரிந்துரைப்பதோடு வளங்கள் மற்றும் வசதிகள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்வதற்கு பதிலாக காணப்படுகின்ற வளங்களையும், வசதிகளையும் வினைத்திறனான முறையில் பயன்படுத்த வேண்டும்.

திணைக்களங்கள் எதிர்காலத்தில் எந்தவிதமான குழப்பங்களுமின்றி செயற்படுவதற்குரிய பதிவுகளையும், முறைப்படியான முழு மைப்படுத்தல்களையும் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் வளர்ச்சியானது அதிகளவில் கல்வியிலேயே தங்கியுள்ளது என்ற நம்பிக்கை எனக்குள்ளது. ஆகவே சமூகத்தின் கோரிக்கைகளுக்கு அமைவாக கல்வித்தரம் பூர்த்திசெய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் மாகாணத்தின் கல்வி வளங்களுக்கான தரத்தை மேம்படுத்த வேண்டும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை அடிப்படையாகக்கொண்டு உரிய அலகுகள் ஊடாக விவசாயச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மாகாணத்தில் கைவிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிலங்களை, முழுமையாக அளவீடுசெய்து விவசாயிகளுக்குத் தற்காலிகமாக வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு வகையில் அமைச்சுக்களுக்கு கிடைக்கக் கூடிய உரிமைகளை முறையாக அதிகாரிகள் பயன்படுத்தி செயற்பட வேண்டும். என்று ஆளுநர் மேலும் தெரிவித்தார். (த)

# தென்மராட்சி மாணவருக்கும் கற்றல் செயலட்டைகள்

சாவகச்சேரி, மே 15

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்கள் வீட்டிலிருந்தே கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் தென்மராட்சி கல்வி வலயம் செயலட்டைகளைத் தயாரித்து பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக மாணவர்களுக்கு தொகுதி பாடங்கள் அடங்கிய செயலட்டைகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. சுகாதாரமும் உடற்கல்வியும் , சங்கீதம் , சித்திரம் , புவியியல், குடியியல் , நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களின் செயலட்டைகளும் தரம் 5 மாணவர்களுக்கான கற்றல் கையேடு தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான கணிதம். ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் கற்றல் கையேடுகளும் வழங்கப்படுகின்றன.

விஞ்ஞான பாடத்துக்கான நிதி உதவிகளை தென்மராட்சி அபிவிருத்திக்கழகமும். ஆங்கில பாடத்துக்கான நிதி உதவிகளை. பண்டிதர் க.வேலுப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தினரும் கணித பாடத்துக்கு பாடசாலைகளில் இருந்து தாள்கள் பெறப்பட்டு அச்சிட்டு வழங்கி வருகின்றனர். தொகுதிப் பாடங்களுக்கான நிதி உதவி கிளிநொச்சி சென்.ஜோன்ஸ் 87 அணியினரும் வழங்கியுள்ளனர் என வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார். (ப -9)



கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் செயலக அலுவலர்கள் நேற்று முன் தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (த-222)

# அனலைதீவு மாணவருக்கு கற்றல் செயலட்டைகள்



அனலைதீவு, மே 15

சிறகுகள் அமையம் ஊடாக அனலைதீவில் 3 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் ஒன்று தொடக்கம் 10 வரையான 281 மாணவர்களுக்கு கற்றல் செயலட்டைகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

சதாசிவம் மகா வித்தியாலயம் (தரம் 6-10), வடலூர் அ.த.க.வித்தியாலயம் (தரம் 1-5), தெற்கு அ.த.க வித்தியாலயம் (தரம் 1-5) மற்றும் ஏனைய பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 10 வரையான வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கும் இவை வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு பாட சுய கற்றல் செயலட்டைகளே வழங்கப்பட்டன. தரம் 11 மாணவர்களுக்கு தீவக கல்வி வலயத்தால் குறித்த செயலட்டைகள் வழங்கப்படவுள்ளமையால், சிறகுகள் அமைப்பினரால் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

செயலட்டைகள் சிறகுகள் அமைய செயற்பாட்டாளர்களால் நேரடியாக பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் கையளிக்கப்பட்டள. பாடசாலை ஆரம்பமானதும் குறித்த செயலட்டைகள் ஆசிரியர்களால் திருத்தம் செய்யப்பட்டு செயலட்டைகளை சிறப்பான முறையில் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்தச் செயற்றிட்டத்துக்கான நிதி உதவியை சிறகுகள் அமைய உறுப்பினர் கீர்த்திகன் வழங்கியிருந்தார். (த)

# கடனைச் செலுத்தாததால் முதலுடன் தண்டம் அறவீடு

## நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 15**

**கடன் பெற்ற பணத்தை ஊரடங்கு காலத்தில் செலுத்தப்படவில்லை என்பதற்காக பெண் தலைமைத்துவக் குடும்பங்களிடமும் தண்டப் பணம் அறவிடும் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்ததாவது;

கொரோனா காலத்தில் நிலவிய ஊரடங்கு காலத்தில் தவணைக் கடன் பணத்தைச் செலுத்த முடியவில்லை. இதன் காரணமாக மார்ச் மாதம் இறுதிக் காலத்தில் செலுத்த வேண்டிய பணம் மார்ச் 20ஆம் திகதி முதல் மே மாதம் 11ஆம் திகதி வரையில் ஊரடங்கு நிலவிய சமயத்தில் அரச வங்கிகளில் பெற்ற கடனைச் செலுத்த மேலும் கால அவகாசமும் வழங்குகின்றது. ஆனால் கூட்டுறவு கிராமிய வங்கியில் கால அவகாசம் வழங்காத போதும் நாம் வட்டியினையும் முதலையும் செலுத்துகின்றோம். இவ்வாறு செலுத்தும் பணம் உரிய தவணையில் செலுத்தவில்லை என்பதனால் முதல் , வட்டி ஆகியவற்றுடன் மேலதிகமாக 50 ரூபா தண்டப் பணமும் அறவிடப்படுகின்றமை வேதனையளிக்கின்றது. தற்போது இந்த மாதம் தண்டம் செலுத்தினால் நாம் நான்கு மாதங்கள் தண்டம் செலுத்தும் நிலமை ஏற்படும் என்றனர்.

அந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் அ.பற்றிக் ஜேம்சை தொடர்பு கொண்டு கேட்டபோது "பயனாளிகள் எம்மைத் தொடர்பு கொண்டு வினாவிய சமயம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இயக்குநர் சபைநில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது அங்கீகரிக்கப்படும் வரையில் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் எனத் தெரிவித்தமைக்கு அமையவே அறவிடப்படுகின்றது" என்றார்.

"தற்போதைய சூழலில் தண்டப் பணம் அறவிட முடியாது . இதனால் உரிய தரப்புக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி தண்டப் பண அறவீட்டை நிறுத்த ஆவன செய்யப்படும்" என்று இது தொடர்பில் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ப-105)

# தென்மராட்சியில் உணவகங்கள் திறப்பு

சாவகச்சேரி, மே 15

கொரோனா வைரஸ் காரணமாக சாவகச்சேரி நகரப் பகுதியில் மூடப்பட்டிருந்த உணவகங்கள் அதி உச்ச சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இயங்க சுகாதாரத்துறை திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சாவகச்சேரி நகரப் பகுதியில் இயங்கிய உணவகங்கள் நேற்று வியாழக்கிழமை வியாபார நடவடிக்கைகளுக்காகத் திறந்திருந்தன. தென்மராட்சி பிரதேசத்தின் பிரதான அலுவலகங்கள் சாவகச்சேரி நகரப் பகுதியில் இயங்கி வருகின்றன. அரச, தனியார் அலுவலகங்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இயங்குமாறு பணிக்கப்பட்டதையடுத்து அனைத்து அலுவலர்களும் கடமைகளுக்குச் சமூகமளித்த வருகின்றனர். அலுவலகங்களில் பணிபுரிபவர்களில் பலர் மதிய உணவை உணவகங்களில் பெற்று வந்தனர். மூடப்பட்டிருந்த உணவகங்கள் திறக்கப்பட்டன அவ்வாறு மதிய உணவு பெறுபவர்களுக்கு உதவியாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-9)

# மற்றுமொரு நிதியத்தை ஆரம்பித்தார் கோத்தா

கொழும்பு, மே 15

சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்புக்காக ஜனாதிபதி செயலகம் இட்டுகம என்ற விசேட நிதியத்தை ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதியின் தலைமையில் இந்த நிதியம் செயற்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிதியத்துக்கு #207# என்ற இலக்கத்துக்கு அழைப்பு விடுத்தோ அல்லது www.itukama.lk என்று இணையத்தள முகவரியை பயன்படுத்தியோ நன்கொடைகளை வழங்க முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

# குடும்பத் தலைவர் வெட்டிக் கொலை

## மனைவி, மாமனார் கைது

வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் குடும்பத் தலைவர் சடலமாக மீட்கப்பட்டார். அந்தக் குற்றச்சாட்டில் அவரது மனைவி மற்றும், மாமனார் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை திபுலாகல அரலகங்வில விஜயபாபுர பிரதேசத்தில் பதிவாகியுள்ளது 36 வயதுடைய நபரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

27 வயதுடைய அவரது மனைவியே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குடும்ப தகராறு காரணமாக இவ்வாறு கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மனைவியின் தந்தையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். அரலகங்வில பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப)

# சுகாதார முன்னேற்ற நிலைமை தொடர்பான கலந்துரையாடல்

வவுனியா,மே.15

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் வவுனியாவின் சுகாதார முன்னேற்ற நிலைமை தொடர்பான கலந்துரையாடல் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவலக்தில் நேற்று இடம்பெற்றது.

பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் சு.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், இராணுவத்தினர், பொலிஸார்,மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சரியான முறையில் கடைப்பிடிக்கின்றார்களா என்பதை கண்காணிக்கும் செயற்பாடொன்றை முன்னெடுப்பதாகத் தீர்மானிக்கபட்டது. அதற்காக 5குழுக்களும் உருவாக்கபட்டது. குறித்த குழுவினர் நேற்றைய தினமே வவுனியாவில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வியாபார நிலையங்களுக்கு அறிவுறுத்தல்களையும் அவர்கள் வழங்கினர். (ப-110)

# ஆசிரியர்களுக்கான இணைய வழிச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 15

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்துடன் தமிழ் கல்வி செயற்பாட்டாளர்கள் இணைந்து ஆசிரியர்களுக்கான இணைய வழிச் செயலமர்வை நடத்த வுள்ளனர்.

இந்தச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் 8.30 மணி வரை "இணையவழிக் கல்வியில் இலத்திரனியல் சாதனங்களை வினைத்திறனுடன் கையாளுதல்" எனும் தலைப்பில் இணையத்தில் நடைபெறும்.

இதற்கான பதிவுகளை tinyurl.com/tamilkalviw1 எனும் இணையம் ஊடாக மேற்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-222)

# பயணிகள் விமான சேவைகளை நிறுத்திவைக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, மே 15

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக பயணிகள் விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ள ஸ்ரீலங்கன் விமான சேவை அந்தக் காலத்தை மேலும் நீடிக்க தீர்மானித்துள்ளது.

உலகளாவிய விமான நிறுவனங்கள் நாடுகளுக்கிடையிலான விமான பயணங்களில் பல்வேறு கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து வருவதாக ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ்வாறான நிலையில் அத்தியாவசிய மருத்துவப் பொருள்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை போக்குவரத்துச் செய்ய சரக்கு விமான சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய இக்கட்டான காலகட்டத்திலும் கூட அந்நிய செலாவணியை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் இலங்கை விமான நிறுவனம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக ஸ்ரீ லங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது. தேவையேற்படின் பயணிகளுக்கான சிறப்பு விமான சேவைகளை முன்னெடுக்க தயார் எனவும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ப)

# திங்கள் வரை மழை நீடிக்கும்

கொழும்பு.மே 15



வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் உருவாகி விருத்தியடைந்து வருவதால், தற்போதைய மழையுடனான காலநிலை நீடிக்கும் என்று வானிலை அவதான நிலைய அதிகாரி மொஹமட் சாலிஹின் தெரிவித்துள்ளார்.

இந்த காலநிலை எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கக் கூடும் என்று அவர் எதிர்வு கூறியுள்ளார்.

வங்காள விரிகுடாவில் உருவாகிவரும் தாழமுக்கத்தின் காரணமாக வடக்கு, கிழக்கு, தென், மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மாகாணங்களிலும், கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். வங்காள விரிகுடா கடற்பகுதியில் அதிக மழை பெய்ய வாய்ப்புள்ளது.

அத்துடன் பலத்த காற்றும் வீசும். கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கையருக்கு பிடியாணை

நைஜீரியாவின் சுயாதீன ஊழல் நடைமுறைகள் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பான ஆணையகம் இரண்டு இலங்கையர்களைக் கைது செய்வதற்கான நீதிமன்றப் பிடியாணை உத்தரவைப் பெற்றுள்ளது.

மலேசியா குடியரசின் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திர மோசடி உள்ளிட்டவற்றுக்காக சத்தியராஜ் கந்தராசா மற்றும் வினித் உகாந்தராசா ஆகிய இலங்கைப் பிரஜைகளுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்துப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நீதிமன்ற விசாரணைக்காக அவர்கள் இருவரும் நைஜீரியாவின், அபுஜாவின் மைதாமாவில் உள்ள நீதிமன்றில் முன்னிலையாகத் தவறியமைக்காக நீதிபதி ஒலசம்போ குட்லக், இருவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (க)

# சுமந்திரனின் கொள்கையுடன் எமக்கு உடன்பாடு கிடையாது

## ஜே.வி.பி தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 15**

**மக்கள் விடுதலை முன்னணியின் மே தின ஊர்வலத்தில் சுமந்திரன் கலந்துகொண்டார் என்பதற்காக அவருடைய கொள்கைகளை நாங்கள் பின்பற்றவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் சுமந்திரன் தொடர்பாக முன் வைக்கும் கருத்துக்கள் அனைத்தும் அரசியல் ரீதியான விமர்சனங்கள். சுமந்திரனோடு எங்களுக்குத் தனிப் பட்ட ரீதியான எந்தவொரு குரோதமும் கிடையாது. அதேபோன்று இங்கு இருக்கின்ற அரசியல்வாதிகள் தொடர்பாக எங்களுக்குத் தனிப் பட்ட குரோதங்கள் கிடையாது. நாங் கள் ஒரு அரசியல் கட்சி என்ற வகை யிலே இந்த நாட்டின் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்ற ஒரு சூழல் ஏற்பட்டது. விசேடமாக 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஜன நாயகம் குழிதோண்டிப் புதைக்கப்ப டுகின்ற போது மக்கள் விடுதலை முன்னணியாகிய நாங்கள் ஜனநா யகத்தைப் பாதுகாப்பதற்கான நட வடிக்கைகளை முன்னெடுத்தி ருந்தோம். அந்த நடவடிக்கையிலே நாட்டில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு , ராஜபக்ஷ மற்றும் சிறி சேனவுடைய சட்டவிரோதமான அர சாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்த காலத்திலேயே மக்கள் விடு தலை முன்னணியாகிய நாங்கள் யாழ்ப்பாணத்தில் நடத்திய மே தின ஊர்வலத்தில் சுமந்திரன் இணைந் துகொண்டார். சுமார் 10 -15 நிமிடம் எங்களோடு ஊர்வலத்தில் கலந்து கொண்டார் என்பது உண்மை. அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுக ளும் கிடையாது. அதற்காக நாங்கள் சுமந்திரனோடு அல்லது சுமந்திரன் பின்பற்றுகின்ற கொள்கைகளோடு உடன்பட்டிருக்கின்றோம் என்று அர்த்தப்படாது - என்றார். (ப-20)

# ஊடகப் பேச்சாளர் என்ற பதவியைப் பறியுங்கள்

*விடுதலைப்புலிகள் மக்கள் பேரவை கோரிக்கை*

யாழ்ப்பாணம், மே 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்றபதவியை சுமந்திரனிடமிருந்து மீளப்பெற வேண் டும். இல்லை என்றால் அவரைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று விடுதலைப்புலி கள் மக்கள் பேரவை தெரிவித்தது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

சுமந்திரனின் கருத்து மிகவேதனையினைத் தருகின் றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் வரலாறு தெரியாத ஒருவர். இவர் கொழும்பில் வாழ்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஊடாக உள்வந்தார். கூட்டமைப்பு யாரால் உருவாக்கப்பட்டது என்பது தெரி யாத நபராக சுமந்திரன் காணப்படுகின்றார்.

தமிழ்மக்களின் விடுதலைக்காக அளப்பரிய தியாகங் களைச் செய்தவர்கள் விடுதலைப்புலிகள் தேசியத் தலைவர்அவர்களின் விடுதலைப்போராட்ட வரலாற் றின் ஊடாகத்தான் தமிழர்களின் அவலங்கள் இன்று ஐ.நா சபைக்குச் சென்றுள்ளது.

இப்படிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் நிராகரிக்கப்படவேண்டும், தமிழ் இனத்துக்கு துரோக மாகச் செயற்படுகின்ற சுமந்திரனை ஊடகப்பேச்சாளர் என்ற பதவியில் இருந்து நீக்கவேண்டும். அதுவும் இல்லாவிட்டால் கட்சியில் இருந்து நீக்கவேண்டும். பலதடவைகள் தமிழ் இனத்தின் விடுத லைப்போராட் டத்தைக் கொச்சைப்படுத்தக்கூடிய வகையில் பேசியுள் ளார். இது கூட்டமைப்பில் இருக்கின்ற அனைவருக் கும் தெரிந்த விடயம் - என்றார். (ப-19)

# புலிகளைப் பற்றி கதைக்க புளொட்டுக்கும் தகுதியில்லை

*அனந்தி சீற்றம்*

ஒட்டு குழுக்களாகச் செயற்பட்ட புளொட் அமைப்பை போன்ற அமைப்பினருக்கு விடுதலைப் புலிகளின் போராட்டத்தைப் பற்றிக் கதைப்பதற்கு எந்தவித அரு கதையும் இல்லை என்று ஈழத் தமிழர் சுயாட்சிக் கழக கட்சியின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரி வித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஆயுதப் போராட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு ஆயு தப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்று தெரிவித்திருந்தார். இந்த விடயம் தமிழர்கள் மத்தி யில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான சித்தார்த்தன் தனது கண்டனத்தை தெரிவித்திருந்தார். இந்த நிலையி லேயே அனந்தி சசிதரன் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசாங்கத்துடன் இணைந்து ஒட்டுக் குழுக்களாக செயல்பட்டு மக்களைத் துன்புறுத்திய புளொட் அமைப்பைப் போன்ற ஆயுதக்குழுக்கள் தற்பொழுது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றி கதைப்ப தற்கு எந்தவித அருகதையும் கிடையாது. 2009ஆம் ஆண்டு போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை யில் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு மணி நேரம் அவகாசம் கொடுப்பீர்களேயானால் அவர்கள் மீண்டும் புத்துயிர் பெற்று விடுவார்கள் எனவே அவர்களை அழிக்க வேண்டும் எனக் கூறினார். தமிழீழ விடுதலைப் புலி களினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப் படும்போது புளொட் அமைப்பு விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைக்கப்படவு மில்லை. அவர்கள் விடுதலைப் புலிகள் மௌனிக்கப் பட்ட பின்னர் தான் கூட்டமைப்பில் இணைந்தவர்கள். எனவே தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றியோ அல்லது அவர்களுடைய போராட்டம் பற்றிக் கதைப் பதற்கு எந்தவித அருகதையும் அவர்களுக்கு கிடை யாது - என்றார். (ப-20)

# வீதியோரம் போராடும் தாய்மாரின் நெஞ்சில் எட்டி உதைத்த சுமந்திரன்

*அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை கண்டனம்*

யாழ்ப்பாணம், மே 15

வீதியோரங்களில் கண்ணீரும் கம்பலையுமாக அழுது புலம்பிக்கொண்டு இருக்கும் தாய்மார்களின் நெஞ்சில் எட்டி உதைத்ததைப் போல உள்ளது சுமந்திரனின் பொறுப்பற்ற கருத்து என்று அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையும் தமது கண்டனத்தை வெளியிட்டுள் ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்த செய்திக்கு றிப்பில் மேலும் உள்ளதாவது;

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் ஆயுதமேந்திப் போராடியது தவறு என்றும், தான் அதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் சிங் கள ஊடகமொன்றுக்குக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறியிருக்கும் கருத்தினூடாக தனது கட்சி யின் கருத்தை இவர் தெளிவு படுத்தியுள்ளதுடன், தமி ழர்களின் வெறுப்புக்கும் உள்ளாகியுள்ளார் ஐந்து வயதில் இருந்து சிங்களவர்களுடன் வாழும் வாய்ப்புத் தனக்குக் கிடைத்ததாக கூறிப் பெருமைகொள்ளும் சுமந்திரன் சிங்களம் தனக்கு விட்டெறியும் எலும்புத் துண்டுக்கு வாலாட்டும் ஒரு அரசியல்வாதி என்பதைத் தமிழ்மக்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். சிங்கக் கொடியையும் சிறிலங்காவின் தேசிய கீதத்தையும் ஏற்றுத்தொண்டதாகக்கக் கூறும் சுமந்திரன் தமிழர் நிலத்தில் கால்பதிப்பதற்கே அருகதை அற்றவர் என்ப தைத் தமிழ்மக்கள் உணரவேண்டும். வாக்குப்பொறுக் கும் நோக்கில் தமிழர் பிரதேசம் வந்து வீரவசனங்கள் பேசுவதையும் மாவீரன் திலீபனின் தூபிக்கு மலர் மாலை சூட்டுவதையும் இனிமேல் தமிழ்மக்கள் அனு மதிக்கக் கூடாது. சிங்களத்து டன் வாழ்ந்தவர், இனியும் வாழ விரும்புபவர், துணிவிருந்தால் அவர்களிடமே வாக்கைப்பெற்று நாடாளுமன்றம் செல்லட்டும் பார்ப் போம்.

இன்றும் ஈழத்தில் தமது பிள்ளைகளையும், உறவுக ளையும் சிங்களத்திடம் தொலைத்துவிட்டு வீதி யோரங் களில் கண்ணீரும் கம்பலையுமாக அழுது புலம்பிக் கொண்டு இருக்கும் அந்தத் தாய்மார்களின் நெஞ்சில் எட்டி உதைத்ததைப் போல உள்ளது சுமந்திரனின் இந்த பொறுப்பற்ற செயல். தேசியத் தலைவர் பிரபாக ரன் ஏன் ஆயுதப்போராட்டத்துக்கு வலிந்து தள்ளப்பட் டார் என்பதை ஆய்வுசெய்யாமல் வாயில் வந்தபடி பொறுப்பற்ற தனமாகப் பேசிய சுமந்திரன் ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களிடமும் மன்னிப்புக் கோரவேண்டும். சுமந்திரனை தமிழரசுக்கட்சி பதவி நீக்கம் செய்யுமா- என்றுள்ளது. (ப)

# கூட்டமைப்பு; தமிழ் மக்களுக்கானதா? தனிமனிதனுக்கானதா?

*வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் கேள்வி*

வவுனியா, மே 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கானதா ? அல்லது சுமந்திரன் எனும் தனிமனிதனுக்கானதா? என கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமே முடிவெடுக்க வேண்டுமென முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந் திரனின் தொடர்ச்சியான கருத்துக்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மலினப்படுத்தும் வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கையும், நம்பிக்கையையும் வீழ்ச் சிக்குள் ளாக்கும் வகையிலும் அமைந்து வருகின்றன. புலிகள் முஸ்லிம்களை வடக்கிலிருந்து அவர்களின் பாதுகாப்புக் கருதி வெளியேற்றியமையை ஒரு இன சுத்திகரிப்பு எனவும், விடுதலைப் புலிகளால் காணா மல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் , விடுதலைப் புலிகளும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் எனவும் தொடர்ச் சியாக கருத்துக்களைக் கூறிவரும் சுமந்திரன் அதன் உச்சகட்டமாக பிரபல சிங்கள சமூக ஊடகமொன் றுக்கு வழங்கிய நேர்காணலில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் போராட்டத்தை தான் ஒருபோ தும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் இதை யாழ்ப்பா ணத்திலும் எங்கு வேண்டுமானாலும் கூறுவேன் எனவும் இலங்கையின் தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் ஏற்றுக்கொள்வதாகவும் கூறியுள்ளமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி களை பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இடம்பெறவிருக்கும் பொதுத்தேர்தலில் கூட்டமைப்பின் அரசியல் மேடைகளில் சுமந்திரன் ஏறும்பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் பின்னடைவை சந்திக்க நேரிடலாம். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு கூட்டமைப்பின் தலைமையும் தமிழரசுக்கட் சியின் தலைமையும் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கா னதா? அல்லது சுமந்திரன் எனும் தனிநபருக்கா னதா? என்பதில் சரியான முடிவை மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ப-110)

## மதுவுக்கு பணம் கேட்டு தாயைக் கடித்தார் மகன்

கொழும்பு,மே 15
அதிக மதுபோதையில் காணப்பட்ட நபர் ஒருவர், தனது தாயிடம் மதுபானம் அருந்துவதற்காகப் பணம் கேட்டு தாயின் கையைக் கடித்து தாக்கிய சம்பவம் வாரியபொல பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

வாரியபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தென்னகோன் கிராமத்தைச் சேர்ந்த 69 வயதுடைய தாயார் தாக்குதலுக்கு இலக்காகி நிகவெரட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான தாயைத் தாக்கிய மகன் மதுபோதைக்கு அடிமையாகியிருந்தவர் என்றும், அவரது மனைவி வெளிநாட்டுத் தொழிலுக்குச் சென்றதால் தனது மகனின் 14 வயது மகளைப் பார்த்துக் கொள்வதற்காக சந்தேக நபரின் தாய் தனது மகனின் வீட்டுக்கு வந்து தங்கியிருந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதிக மது போதையில் வந்துள்ள மகன் வீட்டின் கதவைத் தாக்கியுள்ளார். சப்தம் கேட்டு அவரது தாய் வெளியே வந்தபோது தனது தாயிடம் மதுபானம் வாங்குவதற்குப் பணம் கேட்டு தாயின் கையைக் கடித்து தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். பின்னர் அங்கு வந்த அயலவர்கள் தாயை நிகவெரட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வாரியபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## அ.அட்டைக்கான ஒரு நாள் சேவை இடைநிறுத்தம்

கொழும்பு, மே 15
தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒரு நாள் சேவை தொடர்ந்தும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆள்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் திணைக்களத்தின் பணிகளை ஆரம்பித்துள்ளபோதிலும், பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடுவதால் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒரு நாள் சேவை கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எனினும் பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள், சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், கடவுச்சீட்டு விண்ணப்பம் ஆகிய தேவைகள் காரணமாக பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ஊடாக தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (க)

# கொரோனா வைரஸ் உலகில் மறையாது

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

**கொழும்பு,மே 15**
**கொரோனா வைரஸ் ஒருபோதும் உலகிலிருந்து மறையாமல் இருக்கக் கூடும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.**

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவசரநிலைப் பணிப்பாளர் மருத்துவர் மைக் ரையன், கொரோனா வைரஸ் எப்போது முற்றாக மறையும் என்பது தொடர்பான எதிர்வுகூறலை வெளியிட்டுள்ளார்.

'எமது சமூகங்களில் பரவியுள்ள மற்றொரு வைரஸாக கொரோனா வைரஸ் உள்ளது என்பதை வெளிப்படுத்துவது முக்கியமானது. இந்த வைரஸ் ஒருபோதும் முற்றாக மறைந்து விடாமல் இருக்கக்கூடும்' என்று அவர் தெரிவித்துள்ளார். (க)

## பணப்புழக்கம் வலுப்பெற ஒழுங்குமுறை அறிமுகம்

கொழும்பு, மே 15
கொவிட் 19 தொற்றுநோய் பரவல் காரணமாக வங்கிகளின் பணப்புழக்க அளவை வலுப்படுத்த பல ஒழுங்குமுறைகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தி யுள்ளது.

மத்திய வங்கியின் நாணய சபை இந்த ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, அங்கீகாரம் பெற்ற வங்கிகளின் விருப்பப்படி கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த நாணய சபை தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கீகாரம் பெற்ற வங்கிகளின் பண வழங்கல் செயற்பாடுகளை அறிவிக்க, இலாபங்களை முதலீடு செய்ய, அதன் பங்குகளை மீண்டும் கொள்வனவு செய்ய, நிர்வாகக் கொடுப்பனவுகளை உயர்த்த அல்லது டிசெம்பர் 31 ஆம் திகதி வரை வங்கிகளின் பணிப்பாளர் குழுவுக்கு கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு நாணய சபை அறிவித்துள்ளது.

மேலும் அங்கீகாரம் பெற்ற வங்கிகள் அத்தியாவசிய மற்றும் மூலதனச் செலவுகளை இயலுமானவரை எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தற்போதைய சந்தை நிலைமையை கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டுக்கான வங்கிகளின் வருடாந்த பண மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டாம் எனவும் நாணய சபை ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த விசேட நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப தொடர்ச்சியான கடன் ஓட்டத்தை வழங்க வேண்டும் எனவும் இலங்கை வங்கி எதிர்பார்த்துள்ளது. (ப)

## மின்சாரப் பட்டியல்களை தனியாக வழங்கத் திட்டம்

கொழும்பு,மே 15
மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்சார கட்டணப் பட்டியல்களைத் தனித்தனியாக வழங்குமாறு மின்சாரம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர மின்சார சபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு மாதங்களுக்கான மின்சாரக் கட்டணங்களை ஒரே பட்டியலில் வழங்குவதால், மின்கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டியதை அடுத்தே அமைச்சர் இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

இதுவரையில் இரண்டு மாதங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மின்கட்டணப் பட்டியலில் செலுத்துவதற்கும், மின்சாரக் கட்டணத்தை வழங்க ஒரு மாதகாலவகாசம் வழங்குவதென்றும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது. (க)

## சுற்றுலா பதிவுக்கட்டணம் ஒருவருடத்துக்கு நிறுத்தம்

கொழும்பு,மே 15
சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கான பதிவைப் புதுப்பிப்பதற்கான கட்டணங்கள், ஒரு வருடத்துக்கு அறவிடப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான பணம் ஏற்கனவே செலுத்தி பதிவு செய்துகொண்டவர்கள், அடுத்த வருடம் பணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுவர். இந்த ஆண்டுக்காகப் பதிவு செய்து கொள்ளாத நிறுவனங்கள் மற்றும் நபர்கள் அடுத்த பணம் செலுத்தாமலே பதிவைப் புதுப்பித்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பிரதேசசபை முன்பாக வீசப்பட்டன மரக்கறிகள்



கிளிநொச்சி, மே 15
கரைச்சி பிரதேச சபை வர்த்தக செயற்பாட்டுக்கு இடையூறாகவுள்ளது என்று குற்றஞ்சாட்டி வர்த்தகர் ஒருவர் பிரதேச சபை வாயிலில் நேற்றுமுற்பகல் மரக்கறிகளைக் கொட்டிய சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி சேவைச்சந்தையில் வர்த்தக செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் வர்த்தகரே அவ்வாறு செயற்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி அந்த வர்த்தகர் தெரிவித்ததாவது:

வர்த்தக செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பி வருகின்றன. நிரந்தர கட்டடத்தின் ஒரு பகுதியில் சந்தைச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள நிலையில் ஒரு தொகுதியினர் தற்காலிக கொட்டகையிலேயே சந்தையில் ஈடுபட்டுள்ளனர். சந்தைச் செயற்பாடுகளுக்காக அனுமதிக்கப்பட்ட பகுதியில் பூட்டப்பட்டிருந்த வர்த்தக நிலைய உரிமையாளருடன் பேசி வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுத்த நிலையில், கரைச்சி பிரதேச சபையினர் அதைத் தடுத்துள்ளனர். மழை, வெயில் காரணமாக தற்காலிக இடத்தில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது.

இன்று(நேற்று) காலை வர்த்தக நடவடிக்கைக்காகச் சென்றேன். வர்த்தகநிலைய உரிமையாளரை கரைச்சி பிரதேச சபையினர் அச்சுறுத்தினர். என்று தெரிவித்தார்.

இது பற்றி கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதனிடம் கேட்டபோது,

சந்தைக்குள் நிரந்தர இடம் ஏற்படுத்தித்தரும்வரை தற்காலிக இடத்திலேயே வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டிருந்தது. ஏனைய சந்தைக்காரர்கள் அமைதியாக இருக்க குறித்த நபர் மாத்திரம் இவ்வாறு செயற்பட்டார். என்று தெரிவித்தார். (த-35)

# அரவணைக்கும் நாடாக இலங்கை

### இஸ்ரேலிய பிரஜை பெருமிதம்

கொழும்பு,மே 15
கொவிட் 19 வைரஸ் பரவலால் நிர்கதியாகியுள்ளவர்களை அரவணைக்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது. உலகின் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக இலங்கை மக்களின் உபசரிப்பு உள்ளது என்று இஸ்ரேலிய பிரஜையான பிரபல ஒளிப்பதிவாளர் நுசீர் யாசின் தெரிவித்துள்ளார்.

அவர் காணொலிப் பதிவொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளதாவது:

கொவிட் 19 தொற்றிலிருந்து விடுபட முயற்சிக்கும் ஒரே நாடு இலங்கை.

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது மடிந்து போய் விட்டது. உலகம் வழமைக்குத் திரும்பிய பின்னர் இலங்கையர்கள் நன்றியுடன் நினைவுகூறப்படவேண்டும்.

இலங்கைக்கு அதிக அளவிலான சுற்றுலா பயணிகள் செல்வதன் மூலமாகவே அந்த நன்றிக் கடனைச் செலுத்த முடியும். - என்றார். (க)

# ஒன்றிணைவதில் சிக்கல் இல்லை

## மயாந்த திஷாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு,மே 15

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒரே மாதிரியான கொள்கைத் திட்டத்தைக் கொண்டிருப்பதால், எதிர்வரும் காலத்தில் ஒன்றிணைவதற்குச் சிக்கல் இல்லை. பொதுத் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலின் பின்னரும் ஒன்றிணைய வேண்டிய தேவை ஏற்பட்டால் நாங்கள் இணைந்து செயற்படத் தயாராகவே உள்ளோம்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயாந்த திஷாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனாத் தொற்றின் காரணமாக பொருளாதார நெருக்கடி மற்றும் சுகாதார நெருக்கடியை எதிர்நோக்கி வரும் மக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் விட தேர்தல் அவசியமற்றது.

அதனாலேயே தேர்தலை நடத்த முன்னர் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தெரிவிக்கின்றோம். அதனை ஆளும் தரப்பினர் நாங்கள் தேர்தலுக்கு அஞ்சியே இவ்வாறு கூறிவருவதாகக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

அரசாங்கம் தம்மிடம் நிதி இல்லை என்று தெரிவித்துக் கொண்டு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்காக வழமை ஒப்பந்த திட்டத்துக்குப் புறம்பாக அவர்களுக்குச் சாதகமான நிறுவனமொற்றுக்கு ஒப்பந்தப்பணம் வழங்குவதற்காக, அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

வைரஸ் பரவலின் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கான தேவை என்ன? தற்போது மக்களின் நலனைப் பாதுகாப்பதே அவசியமாகும்.

கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக நாடாளுமன்றத்தை ஒரு நாள் மாத்திரமாவது மீண்டும் கூட்டி கொரோனா தொடர்பான சட்டம் மற்றும் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் அரசாங்கத்துக்குப் பெற்றுக் கொடுக்க எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் தயாராக உள்ளோம். அமைச்சர் உதய கம்மன்பில போன்றோர், ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவதன் நோக்கிலே தேர்தலைப் பிற்போடுமாறு கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். ஐ.தே.க. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஒரே கொள்கைத் திட்டத்தைக் கொண்டுள்ளது.

அதனால் தேர்தலுக்கு முன்னரே நாங்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தேர்தலின் பின்னரும் தேவை ஏற்படின் நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவோம். அரச தரப்பைச் சேர்ந்த பலர், அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது திருப்தியற்று எம்மோடு கைக்கோர்க்க தயாராக உள்ளனர். பலர் எம்முடன் தொலைபேசியூடாகத் தொடர்புக் கொண்டும் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

அதனால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள பீதியினாலேயே நாடாளுமன்றம் மீண்டும் கூடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இன்று பெருமளவான அரசியல் ஒப்பந்தங்கள் இடம்பெறுகின்றன. இவற்றை இல்லாதொழிக்க வேண்டும். அதனாலேயே முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் நாங்கள் களமிறங்க உள்ளோம். மக்கள் எம்மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் எடுத்த தீர்மானம் தொடர்பில் தற்போது தெளிவடைந்திருப்பார்கள். அதனால் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த உறுப்பினர்களையே அதிகளவில் தெரிவுசெய்வார்கள் என்று நம்பிக்கை எமக்குள்ளது- என்றார். (க)

# இராணுவத்தின் ஆட்சிக்கு வித்திடும் கோத்தா அரசு

## நிரோஷன் பெரேரா சாடல்



கொழும்பு,மே 15

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் இராணுவ ஆட்சிக்கு வித்திட்டு வருகின்றது. இதனால் இராணுவத்தினர் ஒருவர் உங்கள் வீட்டின் கதவையும் தட்டுவதற்காக வாய்ப்பு உள்ளது.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரால் சுமேந்ர பெரேராவை விவசாயத்துறை அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி நியமித்துள்ளார். இராணுவத்தினரிடம் எவ்வகை ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் அரசாங்கம் தெளிவின்றிச் செயற்பட்டு வருகின்றது.


மருத்துவ சங்கத்தினர் வைரஸ் பரவலையும், போரையும் தொடர்பு படுத்தி குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்திருந்த போதும், கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காணுவதற்காகக் கடற்படையினரை அனுப்பினர். அதனால் இன்று பெருமளவான கடற்படையின் கொரோனா தொற்றுக் குள்ளாகியுள்ளனர்.

நகரசபை, பிரதேசசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அனுபவம் கூட இல்லாத கோத்தாபயவுக்கு எவ்வாறு இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்ற தெளிவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் கடந்த கால ஆட்சியில் இராணுவத்தினருடன் சிவில் பொறுப்புகளைக் கையளித்தமையால் ஏற்பட்ட விபரீதங்களை அனைவரும் நன்கறிவீர்கள்.

காலகாலமாக அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை வகித்த அரச நிர்வாகத்துறையின் மீது நம்பிக்கை கொண்டிராத ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, அவருடைய சகாக்களான ஓய்வு பெற்ற இராணுவத்தினர் மீது கொண்டுள்ளார். இதன் காரணமாகவே நிர்வாகத்துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வந்த பொறுப்புகளைத் தற்போது இராணுவத்தினரைக் கொண்டு நிறைவேற்றி வருகின்றார்- என்றார். (க)

# ஓய்வு பெறுகிறார் மன். மாவட்டச் செயலர்



மன்னார், மே 15

மன்னார் மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் அரச பணியில் இருந்து ஓய்வு பெற உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஜீலை மாதத்துடன் ஓய்வு பெற்றுச் செல்லும் சி.ஏ.மோகன்றா ஸுக்குப் பதிலாக மன்னார் மாவட்டத்துக்கு பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் மாவட்டச் செயலராக நியமிக்கப்பட உள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் பகுதியில் மன்னார் மாவட்டச் செயலாளராகக் கடமையாற்றிய தேசப்பிரிய அரச கரும மொழிகள் அமைச்சின் செயலாளராக சென்ற பின் சி.ஏ.மோகன்றாஸ் 2018ஆம் ஆண்டு ஜீலை 6ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலாளராக கடமையைப் பொறுப்பேற்றிருந்தார். (ப-213)

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம்,மே 15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் ஆலயம், அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் இராஜேந்திரகுளத்திலிருந்து உளுக்குளம் வரை, கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, துட்டுவாகை, முகத்தான்குளம் 2 ஆவது பண்ணை ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் வட்டுபித்தன்மடு, புதுக்காமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். இதேவேளை இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை, வங்காலைப் பிரதேசம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# மாலைதீவிலிருந்து நேற்று 304 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு,மே 15

கொரோனா வைரஸ் தொற்றால் மாலைதீவில் சிக்கித் தவித்த இலங்கை மற்றும் ஜப்பான் பிரஜைகள் உட்பட 304 பேர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் 102 என்ற விசேட விமானம் மூலமாகவே அவர்கள், பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்களில் 288 பேர் தொற்று நோயால் மாலைதீவில் சிக்கிய இலங்கைப் பயணிகள், ஏனைய 16 பேர் ஜப்பானியர்கள். 16 பேரும் ஜப்பானுக்குப் புறப்படவுள்ளனர்.

பயணிகளை இலங்கை விமானப் படை ஊழியர்கள், விமான நிலைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் கிருமி நீக்கம் செய்தனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளையும் பயணிகள் சோதனை செய்ததுடன் , இலங்கைப் பயணிகள் இராணுவத்தினர் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (க)

## குருதிக்கொடை நிகழ்வு

கொடிகாமம், மே 15

யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

குருதி கொடையாளர்கள் 0776616484 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)

## குளவி கொட்டி முதியவர் பாதிப்பு

சாவகச்சேரி, மே 15

குளவிக் கொட்டுக்கு இலக்கான முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் காணிக்குள் வேலை செய்து கொண்டிருந்த முதியவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் கொடிகாமம் கண்டி வீதியைச் சேர்ந்த நடராசா. லோகநாதன் (வயது-60) என்பவரே குளவிக் கொட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ-9)

## மாணவர்களுக்கு ஊட்டச்சத்து உணவு

### ஐ.நா. நிதியுதவி

பாடாசாலை மாணவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபை, உலக உணவுத் திட்டத்தின் கீழ் 80 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

அத்துடன், சுகாதார வசதிகள் தேவைப்படும் 100 பாடசாலைகளுக்கு 3 மில்லியன் நிதி உதவிகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவியுள்ள நிலையில் பாடசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஒப்பந்தம் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட பணிப்பாளர் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் கைசாத்திடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைகளில் ஆரோக்கியமான உணவைத் தயாரிக்கும் நோக்கத்தில் பாடசாலைகளுக்குள் சமையலறைகளை உருவாக்குவதற்கென 6 மில்லியன் ரூபா நிதி உதவியையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

உள்ளூர் உணவு உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கத்தால், முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் அடிப்படையில், இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# தேர்தலை எதிர்கொள்ள அஞ்சுகிறது எதிர்க்கட்சி

## மஹிந்த கூறுகின்றார்



கொழும்பு, மே 15

**தேர்தலைக் கண்டு அஞ்சும் எதிர்க்கட்சியே தற்போது உள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகம் ஒன்று வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்துவதற்கு பல்வேறு வழிகள் இருந்தாலும் தேர்தல் வேண்டாம் என கோசம் எழுப்பும் விசித்திரமான எதிர்க்கட்சியை இலங்கையில் காண முடிகின்றது.

பொதுவாக தேர்தல் வேண்டும் என குரல் கொடுப்பதே எதிர்க்கட்சிகளின் தேவைப்பாடாக அமைந்துள்ளது. ஆனால் தேர்தல் வேண்டாம் என பீதியில் அஞ்சும் எதிர்க்கட்சி குறித்து மக்கள் நன்றாக புரிந்து வைத்துள்ளனர்.

தேர்தலை நடத்துவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. இன்று ஊடகங்கள் மிகவும் பலமானவை. தேர்தல் நடத்துவதற்கு ஊடகங்களின் ஊடாக வேட்பாளர்கள் பரப்புரை செய்ய முடியும்.

கடந்த காலங்களில் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்களின் மூலம் பரப்புரை செய்யும் வேட்பாளர்களுக்கு பல்வேறு மாற்று வழிகள் உண்டு, அதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

வேட்பாளர்களுடன் ஒன்றிரண்டு பேரை அழைத்துக்கொண்டு வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்ய நல்ல சந்தர்ப்பம் உண்டு. சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் தேர்தல் கூட்டங்களை நடத்த முடியும். வாக்களிக்கும் போதும் பாதுகாப்பான வழிமுறையில் வாக்குச்சாவடிகளுக்கு செல்லச் சந்தர்ப்பம் உண்டு.

தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதிமொழி வழங்காது இந்த எதிர்க்கட்சிகள் தேர்தலைக் கண்டு அஞ்சி பீதியில் நடுங்குகின்றன. தேர்தல் வேண்டாம் எனக் கூறுவதன் மூலம் எதிர்க்கட்சிகள் விளம்பரம் தேடிக்கொள்கின்றன. - என்றார். (எ)



## 212 லீற்றர் கோடாவுடன் கைதானவர் மறியலில்

சாவகச்சேரி, மே 15

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் 212 மில்லிலீற்றர் கோடா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சாவகச்சேரி வடக்கு நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சந்தேகநபர் நேற்றுமுன் தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டிருந்தார். நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோதே எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)



## மூலிகைகளுடன் நீராவி அறை

கொழும்பு.மே 15

கொழும்பு நகர சபை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, நகராட்சி மன்றத்தின் சுதேச மருத்துவத் துறையினரால் மூலிகை நீராவி அறை உருவாக்கப்பட்டுள்ளது.

மூலிகை நீராவி அறை, கொழும்பு மேயர் திருமதி ரோஸி சேனநாயக்கவால் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

இந்த அறை மருத்துவ மதிப்புள்ள பூர்வீக மூலிகைகளைக் கொண்டுள்ளது. 50 சென்டிகிரேட் வெப்பநிலையில் இது பராமரிக்கப்படுகிறது. நீராவியை உள்ளிழுப்பது ஆயுர்வேதத்தில் பிரபலமான "டும் ஹட்டிய" சிகிச்சைக்கு சமம் என்று கூறப்படுகிறது. மேலும் இது சுவாச அமைப்பின் சுத்திகரிப்புக்குக் காரணமாகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சாவகச்சேரி பிரதேசத்தில் 14 வேலைகள் ஆரம்பம்

கொடிகாமம், மே 15

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 'சபிரிகம' வேலைத் திட்டத்தில் 14 வேலைகளை ஆரம்பிப்பதற்கான மதிப்பீடுகள் நிறைவு செய்து ஒப்பந்தகாரர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

அதில் வரணி வடக்கு சிறிகணேசா சனசமூக நிலைய வீதி, நாவற்காடு நெல்லிப்புல இணைக்கும் வீதி ,வரணி இயற்றாலை கலைவாணி சனசமூக நிலைய வீதி ,வரணி கரம்பைக்குறிச்சி மேற்கு மயான வீதி ,வரணி இடைக்குறிச்சி மேற்கு மயான வீதி,எம்.பி.சி.எஸ் துறைமுக அம்மன் கோவில் வீதி, கார்த்திகைப் பிள்ளையார் கோவில் வீதி, அல்லாரை அறுகம்புலம் வீதி,குடமியன் வரணி ஆதிசிவன் வீதி,போக்கட்டி அ.த.க.பாடசாலை முன் வீதி,சம்பாவெளி பிள்ளையார் கோவில் வீதி,ஒளிர் ஆரம்ப பாடசாலை வீதி, மந்துவில் பிரம்படி வீதி, மந்துவில் வடக்கு குட்மன் வீதி,தாவளை இயற்றாலை கல்வளை பிள்ளையார் கோவில் வீதி ஆகியன சீரமைக்கப்படவுள்ளன. (ஐ-159)

## பாடசாலைகளை ஆரம்பிக்க முன் தயார்ப்படுத்தப்பட வேண்டியவை

### சுற்றறிக்கை வெளியிட்டது கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம், மே 15

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் 8 அம்சங்களைக் கொண்ட நடவடிக்கைகளைப் பின்பற்றி பாடசாலைகளைத் தயார்ப்படுத்த வேண்டும் என்ற சுற்றறிக்கையை கல்வி அமைச்சு தற்போது வெளியிட்டு கல்வி சார்ந்த அலுவலக தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பின்னரே பாடசாலைகள் ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும். அதற்கு முன்னர் கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு பாடசாலைகளைத் தயார்ப்படுத்த வேண்டும். முதலில் அதிபர் தலைமையில் சுகாதார மேம்பாட்டு குழு அமைக்கப்படவேண்டும். அந்தக் குழுவில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், மாவட்டச் செயலர், மாவட்ட சுகாதார அலுவலர், கல்வி அலுவலகத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற அலுவலர்கள் உள்ளடக்கப்படவேண்டும். கல்விச் சமூகத்தின் பங்களிப்புடன், பிரதேச சுகாதாரத் துறையினர், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகளுடன் சுகாதார மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும்.

பாடசாலை நுழைவாயில், மலசல கூடம் ,முடிந்தால் வகுப்பறை வாயிலில் கைகழுவும் தொகுதி அமைக்கப்படல் வேண்டும். தொடர்ச்சியாக தண்ணீர் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், பாடசாலைகள் வேறு ஏதேனும் தேவைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றால் மூன்று நாளைக்கு முன்னரே பாடசாலையை தயார்ப்படுத்தவேண்டும். பாடசாலையைத் தொற்று நீக்கம் செய்தல், உடல் வெப்பத்தை அளவிடுவதற்கு பொருத்தமான இடத்தைத் தயார் செய்து ,உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல் நோய் வாய்ப்பட்டு பிள்ளையை உடனடியாகத் தனிமைப்படுத்துவதற்கு இடம் ஒன்றைத் தயார் செய்து அதற்குத் தேவையான பொருள்கள் இருத்தல் வேண்டும், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் பெற்றோர் மற்றும் பாடசாலைச் சமூகத்தை அறிவுறுத்தல் வேண்டும்- என்றுள்ளது. (ஐ-7)

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



புன்னாலைக்கட்டுவன் பகுதியில், கொரோனா தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட நாளாந்த வருமானம் பெறும் குடும்பங்கள் சிலவற்றுக்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் அறிவுறுத்தலின் அடிப்படையில் ஆசிரியர் செ.பிரதாப்பினால் உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ந)



மட்டக்களப்பு சந்திவெளியில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் கோவில் வளாகத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள்மாருக்கு 'ஜீவ ஊற்று அன்பின் கரம்' அமைப்பால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



வட்டக்கச்சி இராமநாதபுரம் வட்டாரத்தில் அழகாபுரி கிராமத்தில் வசிக்கும் வறுமைக்குட்பட்ட 48 குடும்பங்களிற்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. மேற்படி உணவுப் பொதிகளை புளியம் பொக்கணை கலவெட்டித்திடலை சொந்த இடமாகவும் லண்டனில் வசித்து வருபவருமான கார்த்திகேசு சசீலன் வழங்கினார். (ம-222)



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள போரதீவு பகுதி வாழ் மக்களுக்கு பேராதீவு கனேடிய ஒன்றியத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-150)




உடுவில் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட வறுமைக்குட்பட்ட குடும்பங்களுக்கு லாவா கெயர் மூலம் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. குழந்தைகளுக்குப் போஷாக்குப் பொதிகளும் அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டன. (ம)



மட்டக்களப்பு வாசம் உதவும் கரங்கள் அமைப்பால் கிரான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பறங்கியாமடு கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



கொரோனா இடரால் பாதிக்கப்பட்டிருக்கும் அம்பாறை மாவட்ட மக்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ பொதி வழங்கும் செயற்றிட்டம் கல்முனையன்ஸ் போரமினால், கல்முனையன்ஸ் போரத்தின் செயற்பாட்டாளர் பீ.எம்.சன்ஸீரின் தலைமையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. (ம)

**நாகபூஷணி திருமண சேவை**

மணமக்கள் அனைவருக்கும் பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம் (13.05 முதல் 15.05 வரை) நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**T.P: 021 222 9306, 077 138 7596**

**வாடகைக்குத் தேவை**

கொழும்பில் இயங்கி வரும் பிரபல பொறியியல் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு இடம் தேவை. நாவலர் வீதி, பிறவுண் றோட், கஸ்தூரியார் வீதி, 1ஆம் குறுக்குத் தெரு ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்கள் மற்றும் வீடும் (2500 சதுர அடி) விரும்பத்தக்கது.

**077 3867 695, 077 230 6642**

**உதவியாளர் தேவை**

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் லாவண்யா மூக்கு கண்ணாடியகத்துக்கு பெண் உதவியாளர் தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் மட்டும்.

**021 222 9053**

**யாழ் நகரில் மாடி வீடு வாடகைக்கு உண்டு**

AC உடன் மேல், கீழ் 6 அறைகள் உட்பட 2 விசாலமான Hall, அற்றாச் பாத்றூம், வாகன தரிப்பிடம் கொண்ட சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப்படும்.

**குறிப்பு:** மேல் வீடு, கீழ் வீடு தனித் தனி வாசல்கள் தனித்தனியாகவும் வாடகைக்கு விடப்படும்.

**கடற்கரை வீதி, ஹோலிகுறொஸ் ஆஸ்பத்திரி அருகாமையில்.**

தொடர்புகளுக்கு: **077 176 2228, 021 222 7893**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்**



மலர்வு 30 08 1953

உதிர்வு 16 04 2020

அமரர் திருமதி **அருளானந்ததேவி மேகநாதன்**

(இளைப்பாறிய கணித ஆசிரியை – யாழ் இந்து மகளிர் கல்லூரி)

அம்மா

கடந்த மாதம் 16.04.2020 வியாழக்கிழமை காலை சிவபதமடைந்த எமது தாயார் திருமதி. அருளானந்ததேவி மேகநாதன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினம் 16.05.2020 அன்று நடைபெறவுள்ளது. அன்னாரின் மரண நிகழ்வின் போது இவ் அசாதாரண சூழ்நிலையிலும் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்கட்கும், நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்கட்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், வைத்திய சாலையில் இருந்தபோது கைகொடுத்து உதவிய வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பல்வேறு வகையில் உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

60, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9954

நன்றி!

பிள்ளைகள்
உமைகரன், அமலன்

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி யோசப் பிலோமினா

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்கை பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசப் பிலோமினா கடந்த (14.05.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி யோசப்பின் அன்பு துணைவியாரும், காலஞ்சென்றவர்களான யோசேப் அமலஉற்பவம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானமுத்து சவராசியின் அன்பு மருமகளும், பப்சன் லீலி (செல்லா-போதனா ஆசிரியை), ஸ்ரனிஸ் லொஸ் (ஜீவா-ஜேர்மனி), மேரி கிளேறா லீலி (யோகா), ஜோன் ஜெனிஸ் (தேவா- லண்டன்), அருட்பணி அன்ரனி கியூபேட் (அ.ம.தி), அன்ரன் யூட்ஸ் (தயா- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெறோம் (காட்வெயார் பண்டத் தரிப்பு), வெனிக்னாயோய், மங்களதாஸ் (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை), ஜெக் கொலின் டல்சி, சுஜி ஆகியோரின் அன்பு மாமியாரும், போல் அபிராஜிதன், சந்தோஸ், டினிஸ்ரன், தனுஜன், லௌறா, லக்ஷன், லருஷா, அஜித், மெல்வின் அஞ்சலி, லவன், யுவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சூசானம், ஞானரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜேக்கம், மேரி மெற்றலின் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (16.05.2020) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித செபமாலை மாதா ஆலயத்தில் இடம்பெற்று, பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்டத்தரிப்பு.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 232 8166**
**ஸ்ரனிஸ்லொஸ் (ஜீவா)**
**4917632291870**
**ஜோன் ஜெனிஸ்**
**447960437738**
**அன்ரன் யூட்ஸ்**
**33651831670**

ராஜிதவின் முதலைக்கதையே

# வடக்கு வாக்கு வங்கியை எங்களுக்குச் சிதைத்தது!

பந்துல குற்றச்சாட்டு

**கொழும்பு, மே 15**

**ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபயவுக்கு வாக்களிப்பதற்கு தயாராகவிருந்த வடக்கு, கிழக்கு மக்கள், ராஜித சேனாரத்னவின் முதலைக் கதையால் ஏற்பட்ட அச்சம் காரணமாகவே முடிவை மாற்றினர் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் குறித்து எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் எமது முன்னாள் நண்பர் ராஜித சேனாரத்ன ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார். தாடி, மீசைகள் எல்லாம் வைக்கப்பட்டு சாட்சிக்காக இருவர் வரழைக்கப்பட்டனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மக்களை கொலைசெய்து, சடலத்தை முதலைக்கு போடுவதைக் கண்டதாக அவர்கள் கூறினர்.

ஜனாதிபதிக்கு வாக்களிக்கவிருந்த மக்களை திசைதிருப்புதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையே இது. குறிப்பாக அரச ஊடகங்களிலும் அடிக்கடி இந்த செய்தி வெளியிடப்பட்டது. இதனால் வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் ஏற்பட்டது. இப்படியான போலியான சர்ச்சைக்குரிய அறிவிப்பாலேயே அவருக்கு எதிராக சட்டம் செயற்படுகின்றது. அதற்கு எம்மால் ஒன்றும் செய்யமுடியாது, என்றார். (ஒ,5,44)

# நீதி கிடைக்கும்; ராஜித நம்பிக்கை

கொழும்பு, மே 15

என்னை விளக்கமறியலில் வைத்தாலும் எனக்கு விரைந்து நீதி கிடைக்கும். இது உறுதி. இவ்வாறு முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வெள்ளை வான் கடத்தல் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில் பிணை இரத்தாகியதையடுத்து முன்னாள் அமைச்சர் ராஜித, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அதற்கு முன் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளை வான் கடத்தல் சாரதிகள் எனச் சொல்லப்பட்டோரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் நான் கலந்துகொண்டமைக்காக என் மீது வேண்டுமென்றே வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. எனக்கு வழங்கப்பட்டிருந்த நீதிமன்றப் பிணை உத்தரவும் கைவிடப்பட்டுள்ளது. இந்தநிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னைக் கைதுசெய்வதற்குமுன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகின்றேன்.

என்னைக் கைதுசெய்வார்கள். நீதிமன்றத்தில் முற்படுத்துவார்கள். விளக்கமறியலில் வைப்பார்கள். இதற்கெல்லாம் நான் பயந்து மறைமுகமாக இருக்கமாட்டேன். எல்லாவற்றையும் சவாலுக்குட்படுத்தியே நான் விசாரணைக்காக முன்னிலையாகின்றேன். என்னை விளக்கமறியலில் வைத்தாலும் எனக்கு விரைந்து நீதி கிடைக்கும். இது உறுதி -என்றார். (ஒ,5,22)

# அரசியல் பழிவாங்கலே ராஜிதவின் கைது

*சஜித் கொதிப்பு*

கொழும்பு, மே 15

'ராஜபக்ச அரசின் திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல் நிகழ்ச்சி நிரலுக்கமையவே முன்னாள் சுகாதர அமைச்சர் ராஜித சேனாரத்ன கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். எனவே, அவருக்கு நீதி கிடைக்க வேண்டும்' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'நல்லாட்சி அரசை அமைக்க முன்னின்று செயற்பட்டவர்களை ஏதோவொரு காரணத்துக்காக இந்த அரசு கைதுசெய்து வருகின்றது. ஆனால், நீதிமன்றத்தின் நடுநிலையான தீர்ப்பின் பிரகாரம் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர். அந்தவகையில் வெள்ளை வான் கடத்தல் ஊடகவியலாளர் சந்திப்பு வழக்கில் இரண்டாவது தடவையாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ராஜித சேனாரத்னவுக்கும் விடுதலை கிடைக்கும் என்று நாம் நம்புகின்றோம். இந்தக் கைது நடவடிக்கை மூலம் அரசு அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றது. அந்த முயற்சியை நாம் தோற்கடிப்போம். ஏனெனில் நியாயமான நீதி எமது பக்கமே நிற்கும்'- என்றார். (ம-22)

### தமிழர் நலனில் இந்தியா அதிக கரிசனை

# கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயார்

## இலங்கைக்கான புதிய தூதர் கோபால் உறுதி
## சம்பந்தனுடன் தொலைபேசியில் நேற்றுப் பேச்சு

கொழும்பு, மே 15

'இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியா அதிக கரிசனை கொண்டுள்ளது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுவதற்கு நான் தயாராகவுள்ளேன்' இவ்வாறு இலங்கைக்கான புதிய இந்தியத் தூதர் கோபால் பாக்லே நேற்று வாக்குறுதியளித்தார்.

இவர் தனது நற்சான்றுப் பத்திரத்தை நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளித்த பின்னர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். கடமைகளைப் பொறுப்பேற்ற கையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட அவர், சில நிமிடங்கள் மனம் விட்டுப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'எமது நட்புறவு தொடர வேண்டும். நேசக் கரத்தை நாம் பலப்படுத்த வேண்டும். விரைவில் தங்களைச் சந்திப்பேன்' என்றும் இரா.சம்பந்தனிடம் கோபால் பாக்லே மேலும் தெரிவித்தார்.

'இந்தியாவும் இலங்கையும் அயல் நாடுகள். நட்புறவு நாடுகள். இரண்டு நாடுகளும் பல காலங்களாக இணைந்து செயற்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தொடர்ந்து இருக்கும்' என்று இதன்போது இரா.சம்பந்தன் உறுதியளித்தார்.



'இலங்கையில் தமிழர்களுக்கு கௌரவமான நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரைக்கும் இந்தியாவின் பங்களிப்பு முழு ஆதரவு தொடர வேண்டும் என்பதே எமது விருப்பம்' என்றும் இரா.சம்பந்தன் மேலும் கூறினார்.

(ம-22)



# 12 லட்சம் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம்!

கொழும்பு, மே 15
கொரோனா வைரஸ் தாக்கத்தால் அடுத்துவரும் 6 மாதங்களில் உலகளாவிய ரீதியில் 12 லட்சம் குழந்தைகள் இறக்கலாம் என்று அச்சம் வெளியிட்டுள்ளது யுனிசெப்.
அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் ப்ளும்பேர்க் பொதுச் சுகாதார நிறுவன ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
கொரோனா தடுப்பு நடவடிக்கையாக தெற்காசியாவில் பல நாடுகளில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் குழந்தை பிறப்பு, சிசு பாதுகாப்பு, நோய்த் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றில் தொய்வு ஏற்பட்டுள்ளது.
அதேவேளை, பல நாடுகளில் பாடசாலைகள் மூலமாகவே குழுந்தைகளுக்கு சந்துணவு கிடைத்தது என்றும், அவை தற்போது மூடப்பட்டுள்ளதால், குழந்தைகள் சத்துணவு இன்றி உள்ளனர்.
ஊட்டச்சத்து இன்றிக் குழந்தைகள் பெரும் அபாயத்தைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும், அடுத்த 6 மாதங்களில் 5 வயதுக்குட்பட்ட 12 இலட்சம் குழுந்தைகள் வழக்கத்தை விடக் கூடுதலா உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இந்தியாவில் மட்டும் 3 லட்சம் குழந்தைகள் பாதிக்கப்படக் கூடும் என்றும், பிரேஸில், பாகிஸ்தான், நைஜீரியா, மாலி, சோமாலியா ஆகிய நாடுகளில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (ஏ)

# உருமாறும் கொரோனா!

நியூயோர்க், மே 15
உலகை ஆட்டிப் படைத்து வரும் கொறொனா வைரஸ், மனித உடலுக்குள் சென்றதும் தன்னை உருமாற்றிக் கொள்கின்றது என்று கண்டறிந்துள்ளனர் விஞ்ஞானிகள். அதனால் கொரோனா வைரஸுக்கு தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பது கடினமாகியுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.
வாய், மூக்கு மற்றும் கண் ஊடாக மனித உடலுக்குள் நுழைந்து கொள்ளும் கொரோனா வைரஸ், ஸ்பைக் என்று அழைக்கப்படும் கொக்கி போன்ற புரதத்தின் மூலம் மனித செல்களோடு இணைந்து கோள்கின்றது. இந்த இணைவு வெற்றிகரமாக நடந்தவுடன், வைரஸ் தனது மரபணுவை மனித செல்களுக்குள் புகுத்திக் கொள்கின்றது.
மனித செல்களுக்கு நுழையும் வைரஸின் மரபணு, அந்த செல்லைத் தனது இனப் பெருக்கத் தளமாக மாற்றிக் கொள்கின்றது. பாதிக்கப்பட்ட செல் ஒரு வைரஸாக மாற்றம் பெற்றுப் பல்கிப் பெருகுகின்றது என்கின்றனர் விஞ்ஞானிகள்.
பொதுவாக வைரஸுக்கு எதிராகச் செலுத்தப்படும் தடுப்பு மருந்து வைரஸின் ஸ்பைக் புரதம் தொடர்பான தகவலை உடலுக்கு வழங்கும். தடுப்பு மருந்து செலுத்தப்பட்டவர்களின் உடலுக்குள் வைரஸ் நுழையும்போது ஸ்பைக் புரதம் அடையாளம் காணப்பட்டு அவை மனித செல்களுடன் இணைவது தவிர்க்கப்படுகின்றது.
ஆனால் கொரோனா வைரஸின் இந்த ஸ்பைக் புரதம் தன்னை உருமாற்றிக் கொள்கின்றது என்று கூறுகின்றனர் விஞ்ஞானிகள்.
62 நாடுகளில் 5 ஆயிரத்து 349 கொரோனா மாதிரிகளைச் சோதனை செய்த விஞ்ஞானிகள் அதன் மரபணுவில் இரு மாற்றங்கள் உள்ளதையும், ஸ்பைக் புரதம் தன்னை உருமாற்றிக் கொள்வதையும் கண்டுபிடித்துள்ளனர்.
கொரோனா வைரஸின் ஸ்பைக் புரதத்தின் தற்போதைய வடிவத்தின் அடிப்படையிலேயே தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சிகள் உலகம் முழுவதும் நடக்கின்றன. ஸ்பைக் புரதம் தன்னை உருமாற்றிக் கொள்வதால் அந்த முயற்சிகள் பயனற்றுப் போய் விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ஏ)

# கொரோனாவை ஆராயும் நிறுவனங்கள் இலக்கு!

நியூயோர்க், மே 15
கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பாக ஆராய்ந்துவரும் நிறுவனங்களைச் சீனாவுடன் தொடர்புடைய இணைய ஊடுருவிகள் இலக்கு வைத்துள்ளனர் என்று அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ. எச்சரித்துள்ளது.
ஆனால் எப்.பி.ஐயின் இந்தக் கருத்தைச் சீனா முழுமையாக மறுத்துள்ளது.
அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ. மற்றும் மற்றொரு பாதுகாப்பு அமைப்பான சிஸாவும் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.
கொரோனா வைரஸ் தொற்றுக்கான பரிசோதனை, சிகிச்சை மற்றும் தடுப்பூசி தொடர்பாக ஆராய்ந்து வரும் அமெரிக்கக் குழுக்களின் தரவுகளைத் திருடுவதற்குச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# ஏழு ஆண்டுகள் காத்திருப்பை காவு கொண்ட துப்பாக்கிச் சூடு!



காபூல், மே 15
பல ஆண்டுகள் குழந்தைக்காக ஏக்கியிருந்த பெண், தனக்குக் குழுந்தை கிடைத்த 4 மணி நேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
ஆப்கனின் பமியன் மாகாணத்தைச் சேர்ந்தவர் 27 வயதான ஜைனாப்புக்கு பல ஆண்டுகளாகக் குழந்தை இல்லை. அவர் கடந்த 7 ஆண்டுகளாகக் குழந்தைப் பேறுக்காகப் பல சிகிச்சைகளை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் அவர் கர்ப்பம் தரித்திருந்தார்.
காபூலில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார். அந்தக் குழந்தைக்கு நம்பிக்கை என்ற பொருள்படும் ஓமிட் என்று பெயரிட்டார்.
செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரும் அவரது குடும்பத்தினரும் பமியன் மாகாணம் திரும்புவதற்குத் திட்டமிட்டிருந்தனர். அதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக அந்தக் கோரச் சம்பவம் நடந்தது.
மருத்துவமனைக்குள் புகுந்த மூன்று துப்பாக்கிதாரிகள் கண் மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஜைனாப் துப்பாக்கிச் சூடு பட்டுச் சரிந்தார். கடந்த 7 ஆண்டுகளாகக் குழுந்தைக்காக ஏக்கியிருந்த ஜைனாப், தனது மகனுடன் 4 மணித்தியாலங்கள் மட்டுமே செலவிட்டிருந்த நிலையில் உயிர் பிரிந்தார்.
"எனது மருமகளை காபூல் அழைத்து வந்தேன். அவளுக்கு நிச்சயம் குழந்தை கிடைக்கும் என்று நம்பியிருந்தேன். இன்று எனது மருமகளை இழந்து விட்டேன். அவளின் உடலுடனும், குழந்தையுடனும் நான் பாமியன் திரும்புகின்றேன்" என்று கண்ணீர் விட்டுக் கதறுகின்றார் ஜைனாப்பின் மாமியார் சஹ்ரா முஹம்மதி.
இந்தத் தாக்குதலில் பிறந்து சில மணி நேரங்களே ஆன இரு சிசுக்களுடன் 16 பெண்கள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர்.
"எனது வாழ்க்கையில் இது போன்ற கொடூரமான மிருகத்தனமான செயலை நான் கண்டதில்லை" என்றார் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஹசன் கமல். இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை. (ஏ)

# சீனாவை நெருக்குவதற்கு ட்ரம்பின் நண்பர் முயற்சி!



நியூயோர்க், மே 15
சீனா மீது பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்கக் கோரும் சட்டமூலம் ஒன்று அமெரிக்க செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய நண்பரான செனட்டர் லிண்ட் சே கிரஹாம் அதைத் தாக்கல் செய்துள்ளார்.
கொரோனா வைரஸ் பரவ சீனாவே காரணம். இது தொடர்பாக அமெரிக்கா நடத்திவரும் விசாரணைக்கு ஒத்துழைத்து வைரஸ் தொடர்பான முழுத் தகவல்களை வழங்கும் வகையில் சீனாவுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும்.
மனித குலத்துக்கு ஆபத்தாகச் செயற்பட்டுவரும் சீனாவிலுள்ள வன விலங்குகள் சந்தையை மூட வேண்ம். இந்த நடவடிக்கையை எடுக்காத பட்சத்தில் சீனா மீது பொருளாதாரத் தடை உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு அதிகாரம் உண்டு என்று அவர் தாக்கல் செய்த சட்ட மூலத்தில் குறிப்பிட்டு ள்ளார்.
சொத்து முடக்கம், பயணத் தடைகள், விஸா இரத்துச் செய்தல், அமெரிக்க நிறுவன ங்களால் சீன வணிகளுக்கான கடன்களுக்குக் கட்டுப்பாடுகள் என்பவற்றை விதிக்க வேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது. இந்தச் சட்ட மூலத்தை குடியரசுக் கட்சிச் செனட்டர்கள் எட்டுப் பேர் வழிமொழிந்துள்ளனர்.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சீன வெளியுறவு அமைச்சின் செய்தி தொடர்பான ஜாவோ லிஜியன், இந்த ஒழுக்கக் கேடான சட்டமூலத்தை சீனா உறுதியாக எதிர்க்கின்றது என்றார். கொரோனா தொற்றின் ஆரம்பத்தில் இருந்தே சீனா வெளிப்படையாக உள்ளதுஎன்றும்அவர்குறிப்பிட்டார். (ஏ)

பௌதீகவியல்
T.K.KAJAN B.Sc
077 653 1177

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில்
காணி விற்பனைக்குண்டு. கே.கே.எஸ்.
வீதியில் இருந்து 50M தொலைவில்
3ஆவது காணி அமைதியான சூழலில்
4.25 பரப்புக் காணி
தொடர்புகளுக்கு:
0777 149 396 (Viber,Watsapp)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.